வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.02.2024 சனிக்கிழமை இதழ் : 34 பக்கங்கள் : 12




## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி வெளியானது!

கொழும்பு, பெப். 03

2023 ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கு 171 புள்ளி, யாழ். இந்துக் கல்லூரிக்கு 149 புள்ளி, யாழ். மத்திய கல்லூரிக்கு 145 புள்ளி, பருத்தித்துறை மெதடிஸ் உயர்தர பாடசாலைக்கு 166, வேம்படி

11

### தரமற்ற தடுப்பூசி இறக்குமதி:

## அமைச்சர் கெஹலிய சி.ஐ.டியினரால் கைது!



கொழும்பு, பெப்ரவரி 03

**முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.**

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்து இறக்குமதி தொடர்பாகவே அவர் கைதுசெய்யப்பட்டார். சுமார் 10 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற விசாரணையின் பின்னரே அவர் கைது செய்யப்பட்டார்.

தடுப்பூசி மருந்து விவகாரத்தில் முன்னாள் சுகாதார

11

## ஜனாதிபதி பதவியிலிருந்து நானாகவே விலகினேன்!

### கோட்டாபய ராஜபக்ஷ



கொழும்பு, பெப். 03

நாட்டு மக்களின் அமோக வாக்குகளாலேயே நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டேன். சிலரின் கோமாளித்தனமான செயல்பாடுகளால்தான் ஜனாதிபதி பதவியில் இருந்து நானாகவே விலகியிருந்தேன். மக்களின் ஆதரவு இன்னமும் எனக்கு இருக்கின்றது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், “ஓய்வு நிலையில் இருக்கும் நான் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை.” - என்றும் அவர் கூறியுள்ளார்.

11

## மூடப்பட்ட புகையிரத கடவையை மீறி சென்றவர் ரயில் மோதி பலி!

கிளிநொச்சி, பெப். 03

மூடியிருந்த புகையிரத கடவையை மீறி மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்டவர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தார்.

கிளிநொச்சி டிப்போ வீதிக்கு அண்மையாக நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், விநாயகபுரத்தை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான மதன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ரயில் வரும் நேரம் என்பதால் புகையிரதக் கடவை மூடப்பட்டிருந்தது. மூடப்பட்டிருந்த கடவையை மீறி நுழைந்த அவர் ரயில் வரும் திசையை

11

## 17 மாதங்களில் மட்டும் 119 பிரசவ மரணங்கள்!

கொழும்பு, பெப். 03

கடந்த 2022 ஜனவரி முதல் 2023 மே வரையிலான 17 மாதங்களில் 119 பிரசவ கால உயிரிழப்புகள் நிகழ்ந்தன என்று தெரிய வந்துள்ளது.

சுகாதார அமைச்சு வெளியிட்ட 2023ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டது.

பல்வேறு சம்பவங்கள் தொடர்பான பின்னணியை கண்டறியும் நோக்கில், துறைசார்ந்தும்

11

## ஆனையிறவு விபத்தில் காயமடைந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 03

ஆனையிறவில் இடம்பெற்ற இ. போ. ச. பேருந்து மற்றும் ஹைஏஸ் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கோபாலசிங்கம் சதீஸ்குமார் (வயது 25) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி அதிகாலை இ. போ. ச. பேருந்து ஒன்று மாடுகளை மோதித் தள்ளியவாறு ஹைஏஸ் வாகனத்தை மோதியது. இதில், வெளிநாட்டுக்கு கணவரையும் மகனையும் அனுப்பி

11

## ‘தமிழக வெற்றி கழகம்’ கட்சி தொடங்கினார் விஜய்!

### நாமல் ராஜபக்ஷவும் வாழ்த்து



சென்னை, பெப். 03

தென்னிந்தியாவின் பிரபல நடிகரான விஜய் ‘தமிழக வெற்றி கழகம்’ என்ற பெயரில் அரசியல் கட்சியை நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

நடிகர் விஜயின் மக்கள் இயக்கம் அமைப்பின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் டில்லியிலுள்ள இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் கட்சியை பதிவு செய்வதற்கு சென்றுள்ள நிலையில் நடிகர் விஜய் தனது கட்சியை எக்ஸ் தளம் வாயிலாக அறிவித்தார்.

11

## நிகழ்நிலை காப்பு சட்டத்தால் மனித உரிமைகளுக்கு பாதிப்பு

### ஐ. நா. மனித உரிமைகள் பேரவை

ஜெனிவா, பெப். 03

இலங்கையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமானது மனித உரிமைகளுக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பணிமனை தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை தடுக்கப்படலாம் என்று பேரவையின் ‘எக்ஸ்’ தளப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் ஊடாக

11

### ஜனாதிபதி தேர்தல்

## ஆதரவு பெறுவதற்காக எமது கட்சியுடன் பேசுக!

### ரணிலுக்கு பெரமுன அழைப்பு

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தமது கட்சியுடன் தனியாகப் பேசித் தீர்மானம் ஒன்றுக்கு வருமாறு சிறீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

தாம் உள்ளிட்ட சிலர் ஏனைய சில கட்சிகளின் உறுப்பினர்களுடனும் ஜனாதிபதியுடனும் இடம்பெற்ற சந்திப்பின்போது இது தொடர்பில் அறிவித்ததாக சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் எம். பி.

11

## சுகாதார தொழில் சங்கத்தினரின் புறக்கணிப்பு இன்றுடன் நிறைவு!

கொழும்பு, பெப். 03

சுகாதார உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை காலையுடன் நிறைவுக்கு வருகிறது.

நேற்றும் நேற்று முன்தினமும் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து உள்ளிட்ட கொடுப்பனவாக மருத்துவர்களுக்கு 35 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதேபோன்ற கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்த நிலையில், நேற்றைய தினம்

11

## நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியில் சகல இலங்கையர்களும் பங்களியுங்கள்

### சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, பெப். 03

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் 76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில்,

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது, வங்குரோத்தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தல் இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது.

நமது அரசியலில், தமிழ் அரசில் தொடங்கிய 'குத்துச் சண்டைப் போட்டி' எப்படி இன்னும் சூடு தணியாமல் இருக்கின்றதோ அதேபோல, இப்போது தெற்கில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அணி சேர்க்கைகளும் ஆள்பிடிப்புகளும் சூடுபிடித்திருக்கின்றன.

சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் முன்னாள் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் சிலர் இணைந்து கொண்டமை கட்சிக்குள் முறுகல் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது பற்றி சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தது ஞாபகம் இருக்கலாம்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபக தவிசாளரும் இதுவரை எல்லா கட்சிகளிலும் அமைச்சராக இருந்தவருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இணைந்து கொண்டபோது அவருடன் இணைந்தவர்களில் முக்கியமானவர்கள் இருவர். அவர்களின் தாய்வீடு பொதுஜன பெரமுன என்பதை விட கோட்டாபயவின் 'வியத்கம' என்பதே பொருத்தமானது.

வியத்கமவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் நாலக கொடஹேவா. மற்றையவர் சன்ன ஜயசுமண. இவர்கள் இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமையே அந்தக் கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியான ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சிகள் என்பவை சிறுபான்மை காட்சிகள்தான். முஸ்லிம் கட்சிகளான சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் மற்றும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இவர்களின் வருகையை ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்தக் கூட்டணியில் கட்சிகளை புதிதாக இணைத்துக் கொள்ளும் அதிகாரத்தை அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியபோதே விமல், கம்மன்பில போன்றவர்களின் இனவாத கட்சிகளையோ கோட்டாபயவின் வியத்கமவிலிருந்து வந்தவர்களையோ இணைத்துக் கொள்ளக்கூடாது என்று நிபந்தனை விதித்திருந்தனர் என்றும் ஆனால், சஜித் பிரேமதாஸ அதனை பொருட்படுத்தாமல் வியத்கமவிலிருந்து அரசியலுக்கு வந்த இருவரையும் சேர்த்துக்கொண்டமை பற்றியும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தது ஞாபகமிருக்கலாம்.

அதிலும் கோட்டாவின் காலத்தில் கோவிட் பெருந்தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை (உடல்களை) அவர்களின் மத நம்பிக்கைக்கு மாறாகத் தீயிட்டு எரிக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தவர் சன்ன ஜயசுமண. அவரை இணைத்துக்கொண்டது முஸ்லிம் கட்சிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

இப்போது, வேறு வழியின்றி அவரை சஜித் கைவிட்டு விட்டாரெனவும் அவர் இப்போது அங்கிருந்து வெளியேறி புதிய அணியில் சங்கமமாகியிருக்கிறார் என்றும் தெற்கு செய்தி ஒன்று தெரிவித்தது.

பொலநறுவையை சேர்ந்தவரும் பிரபல தொழில் அதிபருமான றொசான் ரணசிங்கவை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தபோது சோதிடரின் ஆருடத்தால் ஜனாதிபதி ஆகும் கனவில் 'புரட்சி' செய்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தவர் அவர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரசாரத்தை தொடங்கியிருக்கும் அவருடன் புதிதாக சேர்ந்திருக்கிறார் இந்த சன்ன ஜயசுமண.

சஜித்துக்கு சிறுபான்மை கட்சிகளிடமிருந்து வந்த ஓர் எதிர்ப்பு குறைந்துவிட்டது. வியத்கமவிலிருந்து வந்த மற்றையவர் நாலக கொடஹேவா. அவர் மீதான எதிர்ப்பு, சிறுபான்மை கட்சிகளிடமிருந்து வந்ததை விட அவரின் கட்சியிலிருந்து வந்ததே முக்கியமானது. பொருளாதார கலாநிதி ஆன அவருக்கு சஜித் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் என்ற 'புகைச்சல்' கட்சிக்குள் ஏற்கனவே இருந்த பொருளாதார கலாநிதியான ஹர்ஷ டி சில்வா விடமிருந்தே வந்ததாம். ஆனால், அதற்கு பின்னர் அவருக்கு முக்கியத்துவம் கொடுப்பதை சஜித் தவிர்த்து வருகின்றார் என்கின்றன கட்சி வட்டாரங்கள்.

சஜித் அணியில் கடைசியாக வந்து சேர்ந்தவர் முன்னாள் இராணுவத் தளபதியான தயா ரத்நாயக்க. அவரின் வருகையும் கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

கட்சியில் இருக்கும் மற்றும் மோர் இராணுவத் தளபதியும் கட்சி தவிசாளருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவரின் வருகைக்கு எதிராக போர்க் கொடி தூக்கியிருக்கிறார். யுத்தம் முடிவடைந்ததும் சரத் பொன்சேகா அரசியலுக்கு வர பச்சைக் கொடி காட்டினார். உடனே அவருக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவர் குற்றவாளியாக சிறைக்கு அனுப்பப்பட்டபோது தளபதியாக இருந்தவர் இந்த தயா ரத்நாயக்க. அவரைத் தனக்குத் தெரியாமல் கட்சியில் இணைத்துக்கொண்டமை பற்றி சரத் பொன்சேகா காட்டமாகியிருக்கிறார்.

இப்படி எதுவித முன்யோசனையும் இன்றி கட்சிக்குள் புதியவர்களை இணைப்பதும் பின்னர் நெருக்கடி ஏற்பட்டதும் அவர்களைக் கைவிடுவதும் இப்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் சகஜமாகியிருக்கின்றது.

தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் எத்தனை நெருக்கடிகள் வருகின்றனவோ தெரியவில்லை என்கின்றனர் கட்சிக்கு நெருக்கமானவர்கள்.!

**- ஊர்க்குருவி.**

# தன்னை விமர்சனம் செய்பவர்களை தவறாக முத்திரை குத்துகிறார் அமைச்சர்!

## சட்டத்தரணிகளின் கூட்டு கண்டனம்

கொழும்பு, பெப். 03

தன்னை விமர்சனம் செய்பவர்களை போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் அதற்கு அடிமையான வர்கள் என அமைச்சர் டிரான் அலஸ் முத்திரை குத்துவது கவலைக்குரியது - என்று சட்டத்தரணிகள் கூட்டு கரிசனை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அந்த அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சட்டத்தின் ஆட்சி கட்டமைப்புக்குள் போதைபொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

போதைப்பொருள் பிரச்னைக்கு தீர்வை காண்பது அவசியம். ஆனால், அதே வேளை சட்ட நடைமுறைகளை புறக்கணிக்கும் அல்லது கருத்து சுதந்திரம், கருத்துவேறுபாடு ஆகிய வற்றிற்கான அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் விதத்தில் இதனை முன்னெடுக்கக்கூடாது.

இதேவேளை, தனது அதிகாரங்களை கட்டுப்படுத்தக் கூடிய சட்டங்களை அலட்சியம் செய்வதையும் தனது நடவடிக்கைகளை விமர்சனம் செய்பவர்களை போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் அதற்கு அடிமையானவர்கள் என முத்திரை குத்துவதும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நெறிமுறைகள் மற்றும் தராதரங்களை வெளிநாட்டு செல்வாக்குள்ளவர்கள் எனத் தெரிவிப்பதும் கவலைக்குரிய விடயம் என சட்டத்தரணிகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

மேலும் யுக்திய நடவடிக்கைக்கு பொறுப்பாக சித்ரவதைகளில் ஈடுபட்டவர் என நீதிமன்றம் தெரிவித்திருந்த தேசபந்து தென்னக்கோனை நியமித்துள்ளமை குறித்தும் சட்டத்தரணிகள் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

அரசமைப்பை அமைச்சர் பின்பற்றவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள சட்டத்தரணிகள் அமைப்பு பொதுமக்களின் உரிமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# நீதிமன்றத்தால் விடுதலையானவர் பொலிஸாரால் மீண்டும் விசாரணை!

மட்டக்களப்பு, பெப். 03

மாவீரர்களை நினைவு கூர்ந்தமைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுதலை கிழக்கு மாகாண சிவில் சமூக ஆர்வலர் ஒருவர் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

விமலசேன லவகுமார் என்பவரே பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸாரால் இவ்வாறு விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளார். மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பிலேயே அவர் இவ்வாறு விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

# கொடூர சட்ட ஆக்கத்தைத் தடுக்க செனட் சபை அமைக்க வேண்டும்!

## அரசறிவியல் நிபுணர் உயன்கொட

கொழும்பு, பெப். 03

ஜனநாயகத்துக்கு விரோதமான சட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு 200 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றமும் 50 உறுப்பினர்களை கொண்ட செனட் சபையும் அமைக்கப்பட வேண்டும் என்று மூத்த அரசறிவியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவரும் வேறு பல நிபுணர்களும் சேர்ந்து "அரசியல் மற்றும் அரசமைப்பு மாற்றங்களின் ஊடாக ஜனநாயகத்துக்கான அடிப்படை கோட்பாடுகளும் முன்மொழிவுகளும்" என்ற தலைப்பில் விரிவான ஆவணமொன்றை தயாரித்திருக்கிறார்கள்.

அது தொடர்பாக விளக்கமளித்த பேராசிரியர் உயன்கொட கூறியவை வருமாறு,

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் 1972ஆம் ஆண்டுக்குப் பிறகு நீதித்துறைக்கு வழங்கப்படவில்லை. அடுத்தடுத்து தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றங்கள் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கின்றன.

செனட் சபை அமைக்கப்பட வேண்டும் என்று தற்போது முன்வைக்கப்படும் யோசனை சோல்பரி அரசமைப்பால் அமைக்கப்பட்ட செனட்டின் வழியில் அமைந்ததல்ல.

தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் மக்களின் இறைமை துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிரான ஒரு தடுப்பாக செயல்படக்கூடியதாக செனட் இருக்க வேண்டும் என்றே இப்போது யோசனை முன்வைக்கப்படு கிறது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையை முன்னெடுப்பதற்கு தடையாக செனட் இருந்ததாக அன்று நிலவிய ஒரு கருத்து காரணமாகவே 1972ஆம் ஆண்டில் செனட் ஒழிக்கப்பட்டது.

அந்த நேரத்தில் இருந்த செனட் பிரிட்டனின் பிரபுக்கள் சபையை ஒத்ததாக இருந்ததாக அவர்கள் உணர்ந்தார்கள். இலங்கையின் சூழ்நிலைகளில் செனட் ஜனநாயக விரோதமானது என்று அவர்கள் நினைத்தார்கள். 1972ஆம் ஆண்டில் நானும் அதை ஏற்றுக் கொண்டேன். ஆனால், இப்போது அந்தப் பின்புலம் பெருமளவுக்கு மாறிவிட்டது. கொடூரமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றம் ஆளும் அரசியல் கட்சிகளால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களைப் பாருங்கள். சட்டங்களின் உள்ளடக்கங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் வாசித்துக் கூட பார்ப்பதில்லை என்பது வெளிப்படையானது. இந்த சட்டங்களில் எதுவுமே குடியரசுக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவையாக இல்லை.

பாராளுமன்றத்தின் மீதான நம்பிக்கை முன்னென்றும் இல்லாத அளவுக்கு தாழ்ந்த நிலையில் இருக்கிறது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொந்தக் கிராமங்களுக்குக்கூட செல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள். பாராளுமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது.

நாம் எப்போதும் சிவில் உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் பற்றியே பேசுகிறோம். பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் மக்கள் விரும்புகிறார்கள். இந்த உரிமைகளைப் பற்றி எமது அரசியலமைப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தை தற்போதைய நிலைவரத்துக்கு ஏற்ற முறையில் புதுப்பிக்கவேண்டிய தேவை இருக்கிறது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
03.02.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், தை 20

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சீன நெருக்கடி

உலகின் ஜனநாயக நெறிமுறைகள் பெரும் சவாலை எதிர்கொண்டு வருகின்றன. சீனாவின் எழுச்சியே இதற்கான அடிப்படையான காரணமாகும். சீனா அடிப்படையில் ஓர் ஒற்றைக் கட்சியின் கீழ் நிர்வகிக்கப்படும் சர்வாதிகார நாடு. இவ்வாறானதொரு நாடு எழுச்சியடையும்போது அது நிச்சயம் உலக ஜனநாயக நெறிமுறைகளை நெருக்கடிக்குள் தள்ளும்.

சீனாவால் ஏற்படும் நெருக்கடிகளே இன்றைய நிலையில் உலக அரசியலில் காணப்படும் பிரதான நெருக்கடியாகும். அது எவ்வளவு சிக்கலானது என்பது பற்றி அமெரிக்காவின் வெளியக உளவுத் துறையான சி. ஐ. ஏயின் இயக்குநர் வில்லியம் பேன்ஸ் வெளிவிவகார சஞ்சிகையில் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கின்றார். ‘ஆட்சிக் கலையும் உளவுக் கலையும்’ என்னும் தலைப்பில் அந்தக் கட்டுரை வெளியாகியிருக்கின்றது.

உலக ஒழுங்கை மறுசீரமைக்கும் நோக்கில் சீனாவால் முன்னெடுக்கப்படும் நகர்வுகளால் அமெரிக்க உளவுத்துறை என்றுமில்லாதவாறு புதிய சவால்களை எதிர்கொண்டுவருவதாக அவர் குறிப்பிடுகின்றார். மாவோ சேதுங்குக்கு பின்னர் மிகவும் சக்திவாய்ந்த தலைவராக எழுச்சியுற்றிருக்கும் ஸி ஜின்பிங் உலக அரசியல் ஒழுங்கை மாற்றி எழுத முற்படுகின்றார். சீனாவின் நகர்வுகளை ஆராய்வதற்கான ஒற்றை (Single-country mission center) இலக்குடன் 2021இல் அமெரிக்க உளவுத்துறைக்கான புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கியதாகவும் அந்தளவுக்கு சீனா ஒரு சவாலாக எழுச்சியுற்றிருக்கின்றது என்பதையும் பேன்ஸ் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவின் பிராந்திய செல்வாக்கை கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கிலேயே சீனா செயல்பட்டுவருகின்றது என்பது தெட்டத்தெளிவானது. சீனா எங்கெல்லாம் ஊடுருவ முற்படுகின்றதோ அங்கெல்லாம் முதலில் அந்த நாட்டின் ஜனநாயக பாரம்பரியமே பலியிடப்படும். மகிந்த ராஜபக்ஷ காலத்தின் இலங்கை இதற்கு சிறந்த உதாரணம். தற்போதைய மாலைதீவு நெருக்கடி இன்னோர் உதாரணம். மாலைதீவின் சட்டவாளர் நாயகம் பட்டப்பகலில் சீன சார்பு ஜனாதிபதி மொஹமட் முய்சுவின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டிருக்கின்றார். இவர் முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்.

சிறிய நாடுகளுக்குள் சீனாவின் செல்வாக்கு அதிகரிக்கும்போது இவ்வாறான நிலைமைகளே ஏற்படும். சீன நெருக்கம் ஆட்சியாளர்கள் மத்தியில் அவ்வாறான உற்சாகத்தை ஏற்படுத்தும். இதற்கு அடிப்படையான காரணம் சீனா அவ்வாறான ஓர் அரசியல் ஒழுங்குக்கே தலைமை தாங்க முற்படுகின்றது. அவ்வாறானதொரு புதிய உலக ஒழுங்கை ஏற்படுத்துவதன் மூலமே தற்போதைய சர்வதேச ஜனநாயக ஒழுங்கை சிதைக்க முடியும்.

2020இல் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க செயலர், மைக் பொம்பியோ இலங்கையில் சீனா எவ்வாறு செயல்பட முற்படுகின்றது என்பதற்கான தெளிவான வரைபடமொன்றை வழங்கியிருந்தார். இலங்கையின் இறைமையை சீனா கடலிலும் நிலத்திலும் மீறி வருவதாகக் குற்றம்சாட்டியிருந்தார். ஆனால், பொம்பியோவின் கூற்று தற்போது மாலைதீவுக்கு அதிகம் பொருந்துவதாகத் தெரிகின்றது.

இந்த நிலைமைகளை, அரசியல் தீர்வுக்காகக் காத்திருக்கும் ஈழத் தமிழ் சமூகம் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு தலைமை தாங்குவதாகக் கூறிக்கொள்ளும் தலைவர்கள் என்போர் வேகமாக மாறிவரும் உலக அரசியல் நிலைமைகளை உற்று நோக்கப் பழக வேண்டும். இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டு வாழும் சிறிய எண்ணிக்கையிலான மக்கள் கூட்டத்துக்கு – முதலில் தேவையானது பாதுகாப்பான சூழலாகும். அவ்வாறான பாதுகாப்பை வழங்கக்கூடிய நாடு ஒன்றின் தயவு எப்போதுமே தமிழ் மக்களுக்குத் தேவை. அப்படியொரு நாடு இருக்கின்றது என்றால் அது இந்தியா மட்டும்தான்.

# யாழ். பல்கலைக்கழக மாணவரின் போராட்டத்துக்கு சிறீதரன் ஆதரவு

*யாழ்ப்பாணம், பெப். 03*

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில், தியாகச் சாவைத் தழுவிக் கொண்ட முதல் மனிதன் என்னும் மரியாதைக்குரிய திருமலை நடராஜன், 1957.02.04 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திருமலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக்கொடியை ஏற்றியமைக்காக சிங்களப் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந்தும், இந்த நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராடவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படாத வரை, ஈழத்தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன் - என்றுள்ளது.

(அ)

# 15 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது

*யாழ்ப்பாணம், பெப். 03*

யாழ்ப்பாணம் நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 15 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாயை சேர்ந்த 46 வயது நபரே இவ்வாறு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவரை விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற் படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஐ)

# வலி. தென்மேற்கு பிரதேசத்தில் இருளில் மூழ்கியுள்ள கிராமங்கள்!

*யாழ்ப்பாணம், பெப். 03*

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு வட்டாரத்தில் பல பிரதான வீதிகள் உள்ளக வீதிகள் மின்விளக்குகள் பழுதடைந்த நிலையில் இருளடைந்து காணப்படுகின்றன.

இது தொடர்பில் பிரதேச சபை செயலாளரின் கவனத்துக்கு பொதுமக்கள் எழுத்துமூலமாகவும் நேரிடையாகவும் முறைப்பாடு செய்தும் திருத்த பணிகள் மந்தகதியிலேயே இருப்பதால் பல வீதிகள் இருளடைந்து பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனார்.


இது தொடர்பில் பண்டத்தரிப்பு வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அருள்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ கருத்து தெரிவிக்கையில் -

பண்டத்தரிப்பு வட்டாரத்திற்குட்பட்ட பல பிரதான வீதிகள், உள்ளக வீதிகளின் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பெருஞ்சிரமத்திற்கு ஆளாகியுள்ளனார். பல வீதி விபத்துக்கள் வீதி இருளடைந்த நிலையில் இருப்பதால் ஏற்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் இரவு நேர பாதுகாப்பான பயணம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

இருளடைந்த பகுதிகளில் சமூகவிரோதிகளின் அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினராக நான் நேரில் முறையிட்டும் கூட சில பிரதான வீதி மின்விளக்குகளை தவிர ஏனைய பிரதான வீதி உள்ளக வீதி பகுதிகள் இன்றுவரை இருளடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

பண்டத்தரிப்பு வட்டாரத்தில் மட்டுமல்லாது பிரதேச சபையின் ஏனைய வட்டாரங்களிலும் இந்தப் பிரச்னை அதிகமாகவே உள்ளது.பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் விரைந்து பழுதடைந்துள்ள வீதி மின்விளக்குகளை திருத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் -என்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக்கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின்கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மிதுனம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யேசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**

அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சில சூட்சமங்களை கற்றுக் கொள்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் மறையும்.எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**

சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். சில ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத் தரும் நாள்.

**கன்னி**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**

திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் மோதல்கள் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மகரம்**

மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். தலைமையின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**

இதுவரை இருந்த டென்ஷன், கோபம் குறைந்து மனதில் மகிழ்ச்சியாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புக்களை ஏற்பட கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

# 2026 தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் தனித்து போட்டி

## புதிய கட்சியை அறிவித்த விஜய் தெரிவிப்பு

சென்னை, பெப். 03

தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் நேற்று புதிய கட்சியை தொடங்கினார். எனினும், அவர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அறிவித்துள்ளார். அவர் புதிய கட்சியை தொடங்கியுள்ளார். புதிய கட்சியை

இது தொடர்பாக தமிழக வெற்றி கழக தலைவரும், நடிகருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வரும் பாராளுமன்ற தேர்தலில் நாம் போட்டியிடுவதில்லை என்றும் எந்த கட்சிக்கும் நம் ஆதரவு இல்லை என்று பொதுக்குழு, செயல்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்'

நம் இந்திய அரசமைப்பு சட்டத்துக்கு உட்பட்டு, தமிழ்நாட்டின் மாநில உரிமைகள் சார்ந்து, இந்த மண்ணுக்கேற்ற "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (பிறப்பால் அனைவரும் சமம் ) என்கிற சமத்துவ கொள்கைபற்று உடையதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய அடிப்படை அரசியல் மாற்றத்தை மக்களின் ஏகோபித்த அபிமானமும், அன்பும் பெற்ற முதன்மையான ஒரு மக்கள் சக்தியால் தான் சாத்தியப்படுத்த முடியும்.

இந்நிலையில், என்னுடைய தாய் தந்தைக்கு அடுத்து எனக்கு பெயர், புகழ் மற்றும் எல்லாமும் கொடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் சமுதாயத்திற்கும் என்னால் முடிந்த வரையில், இன்னும் முழுமையாக உதவ வேண்டும் என்பதே எனது நீண்ட கால எண்ணம் மற்றும் விருப்பமாகும். "எண்ணித் துணிக கருமம்" என்பது வள்ளுவன் வாக்கு.

அதன்படியே, "தமிழக வெற்றி கழகம்" என்கிற பெயரில் எமது தலைமையிலான அரசியல் கட்சி தொடங்கப்பட்டு, இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய எமது கட்சியின் சார்பில் இன்று (நேற்று) விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக 25.01.2024 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டத்தில், கட்சியின் தலைவர் மற்றும் தலைமை செயலக நிர்வாகிகள் தேர்தெடுக்கப்பட்டு கட்சியின் அரசியலமைப்பு சட்டம் மற்றும் சட்டவிதிகள் முறைப்படி ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் விரும்பும் அடிப்படை அரசியல் மாற்றத்துக்கு வழிவகுப்பதுதான் நமது இலக்கு. தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றபின் வரும் பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் தமிழ்நாடு சார்ந்த கொள்கைகளின் வெற்றிக்கும், தமிழ்நாட்டு மக்களின் உயர்வுக்குமான எமது கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள் கொடி, சின்னம் மற்றும் செயல்திட்டங்களை முன்வைத்து, மக்கள் சந்திப்பு நிகழ்வுகளுடன், தமிழ்நாட்டு மக்களுக்கான நம் அரசியல் பயணம் தொடங்கும்.

இடைப்பட்ட காலத்தில், எமது கட்சியின் தொண்டர்களை அரசியல்மயப்படுத்தி, அமைப்பு ரீதியாக அவர்களை தயார் நிலைக்கு கொண்டுவரும் பணிகளும், கட்சியின் சட்டவிதிகளுக்குட்பட்டு ஜனநாயக முறையில் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்து, உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகளும் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

இறுதியாக, என்னைப் பொறுத்த வரையில் அரசியல் மற்றொரு தொழில் அல்ல் அது ஒரு புனிதமான மக்கள் பணி. அரசியலின் உயரம் மட்டுமல்ல, அதன் நீள அகலத்தையும் அறிந்து தெரிந்து கொள்ள, எம்முன்னோர் பலரிடமிருந்து பாடங்களைப் படித்து நீண்டகாலமாக என்னை அதற்கு தயார்படுத்தி, மனதளவில் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறேன். எனவே அரசியல் எனக்கு பொழுது போக்கு அல்ல் அது என் ஆழமான வேட்கை. அதில் என்னை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளவே விரும்புகிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# வரவு - செலவு திட்டத்தில் தமிழகத்தை மத்திய அரசாங்கம் புறக்கணித்துள்ளது

## முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை, பெப். 03

மத்திய அரசின் வரவு - செலவு திட்டம் தமிழகத்தைப் புறக்கணிக்கும் 'இல்லாநிலை பட்ஜெட்' என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

பா. ஜ. க. இரண்டாவது முறையாக பதவியேற்று, 10 ஆண்டுகள் ஆட்சி செய்தும், சொல்லிக்கொள்ளும் வகையில் எந்த சாதனையையும் செய்யவில்லை. இந்நிலையில், எடைபோட்டுப் பார்க்க ஏதுமில்லாத வெற்று அறிக்கையை இடைக்கால பட்ஜெட்டாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளார்.

இந்திய பொருளாதாரம் வளரவில்லை, பணவீக்கம் குறையவில்லை, வறுமை ஒழியவில்லை, வேலையில்லா திண்டாட்டம் நீங்கவில்லை. ஆனால், இவற்றைசெய்து காட்டிவிட்டதாக பொய் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கிவிட்டதாக தோளைத் தட்டிக்



கொள்கிறார்கள்.

ஜி. எஸ். டி. வரி வசூல் அதிகரித்திருப்பதாக அமைச்சர் பெருமைப்படும் நிலையில், மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை குறித்து எந்த அறிவிப்பும் இல்லாதது ஏமாற்றமளிக்கிறது. இதனால் இந்த ஆண்டு தமிழகத்துக்கு ரூ.20 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் 'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு, தென்மாவட்ட பாதிப்புகளைக் கருத்தில்கொண்டு 'தீவிர இயற்கைப் பேரிடர்' ஆக அறிவிக்க வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன். அதுகுறித்தும், ரூ.31 ஆயிரம் கோடி நிவாரணத் தொகை குறித்தும் எந்த அறிவிப்பும் இல்லை.

கடந்த மூன்றாண்டு காலமாகசென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கவில்லை.

இந்த பட்ஜெட்டில் தமிழகம் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தி. மு. க. எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவார்கள். பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தியடிகள் சிலை முன் கறுப்புச் சின்னம் அணிந்து போராட்டமும் நடத்துவார்கள் - என்று கூறியுள்ளார். (ஐ)

# தேசிய வருமானத்தில் 64 வீதத்தினை 10 வீத உயர்மட்டமே அனுபவிக்கிறது!

## சுட்டிக்காட்டுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, பெப். 03

**நாட்டின் தேசிய வருமானத்தில் 64 வீதத்தை, வாழ்க்கைத்தரத்தில் உயர்மட்டத்திலுள்ள 10 வீதத்தினரும், கீழ்மட்டத்தில் உள்ள 50 வீதமானவர்கள் 4 வீதமான தேசிய வருமானத்தில் மிகச் சிறிய வீதத்தையே அனுபவிக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் எம்.பி விமல் வீரவன்ஸ வெளிப்படுத்தியுள்ளார்.**

நாட்டின் வரிக் கொள்கையானது மேற்குறிப்பிட்ட பாரதூரமான ஏற்றத்தாழ்வுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும், அந்த ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி சிந்திக்காமல் மறைமுக வரிகளை விதிப்பதன் மூலம், கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவீதத்தினர் தேசிய வருமானத்தில் 4 சதவீதத்தை இழக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் உண்மை நிலையை சரியாகக் கருத்திற் கொள்ளாமல் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதாகவும், அரசாங்கம் நடந்துகொள்ளும் விதம் பற்றிய புரிதல் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார்.

(அ)

# புதிய மின்சார இணைப்புக்களுக்கு தவணையாக பணம் செலுத்தலாம்!

கொழும்பு, பெப். 03

புதிய மின் இணைப்புகளுக்கு ஒரே நேரத்தில் பணம் செலுத்த முடியாத விண்ணப்பதாரர்கள் தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சார சபையிடம் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் எஞ்சிய சேவைகளுக்கு தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு வசதி செய்து தருமாறு பணிப்புரை விடுத்ததாகவும் இந்த வசதிகளை விரைவில் அறிவிக்க வேண்டும்

என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



இதற்கமைய, இந்த வருட மின் உற்பத்தித் திட்டம், அட்டவணை, சேவைச்செலவுகள், மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருளின் விலை, காலநிலை முன்னறிவிப்புகள் தொடர்பில் மின்சார சபையின் செயற்பாட்டுப் பிரிவுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜனாதிபதி தொடர்பாக சிலரின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் தொடர்பில் சிலரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தனிமைப்படுத்தப்பட்ட தீவாக இருக்க முடியாதெனவும், நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்ல வேண்டுமாயின் வெளிநாட்டு தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதும், புதிய வெளிநாட்டு உறவுளை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும்.

அதற்காக வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்கள் முக்கியமானதாகும்.

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலும், இலங்கைக்கு முதலீட்டாளர்களை அழைத்து வருவது தொடர்பிலும் இந்த சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஆதாரமற்றவையாகும்.

இவ்வாறான சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதால் எமக்கும் உலக நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வதோடு, புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும்.

அரசியல் தலைவர்கள் தனியார் துறையினருடன் கலந்துரையாடி வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் இணைந்து அபிவிருத்திச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான இயலுமையும் அதனால் கிடைக்கும்-என்றார்.

(அ)

# மொட்டு கட்சிக்கு தற்போது 30 வீத வாக்குகளே உள்ளன!

## கூறுகிறார் தம்மிக பெரேரா

கொழும்பு, பெப். 03

பொதுஜன பெரமுன கட்சிக்கு தற்போது 30 சதவீதமான வாக்குகளே உள்ளன, கட்சி பிளவுபட்டால் வெற்றி இலக்கை நோக்கி நகரமுடியாமல்போகும் - என்று மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேலைத்திட்டத்தை நான் முன்வைத்துள்ளேன். என்னை வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் கட்சியே முடிவெடுக்கவேண்டும். இலங்கையில் மிக்பெரிய கட்சியாக கருதப்பட்ட பொதுஜன பெரமுன கட்சிக்கு தற்போது நூற்றுக்கு 30 வீதமான வாக்குகளே உள்ளன. கட்சிக்குள் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. எனவே, 51 வீதம் வாக்குகளை பெறக்கூடிய வேட்பாளர் ஒருவரே நிறுத்தப்படுவார் எனவும் கூறப்பட்டது.

பொதுஜன பெரமுன கட்சி பிளவுபட்டால் வெற்றியிலக்கை நோக்கி பயணிக்க முடியாது, 51 வீதம் என்ற வாக்கு இலக்கை அடைய ஒன்றிணைந்தே பயணிக்க வேண்டும். ஒன்றிணைந்து இருந்தால் நிச்சயம் 51 வீதம் என்ற இலக்கை அடையலாம். தற்போதுள்ள 30 வீதத்தை 51 வீதமாக்க முடியுமா என்பது பற்றி பரீசிலிப்போம் என நான் கூறினேன். ஏனெனில் என்னிடம் சிறந்த வேலைத்திட்டம் உள்ளது.

எனது தனிப்பட்ட நோக்கங்களுக்காக அல்ல, நாட்டு மக்களுக்கு நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றேன். 5 வருடங்கள் என்பது, நாளொன்றுக்கு 8 மணிநேரம் என எடுத்துக்கொண்டால் 9 ஆயிரம் மணித்தியாலங்களே உள்ளன, அந்த காலப்பகுதிக்குள் நாட்டை மீட்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நான் பத்திரிகைகளில் பிரசாரம் செய்யவில்லை. அதுகூட ஒரு திட்டமிட்ட சதி நடவடிக்கையாக இருக்கக்கூடும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்துக்கும் தெரியப்படுத்தினேன்-என்றார்.

(அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரை உயர்நீதிமன்ற நீதிபதியாக்க அரசியலமைப்பு பேரவை அனுமதி மறுப்பு!

கொழும்பு, பெப். 03

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்ததை அரசியலமைப்புச் சபை ஏற்க மறுத்துள்ளது.

முக்கிய பதவிகளுக்கான ஜனாதிபதி வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட்டதால், ஜனாதிபதியும் அரசியலமைப்புப் பேரவையும் இப்போது மோதல் போக்கில் உள்ளனர்.

இதற்கு முன்னர், முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு சேவை விலக்களை வழங்குவதில் ஜனாதிபதி சிக்கலை எதிர்கொண்டார். விக்கிரமரத்னவின் பதவி நீடிப்பை அரசியலமைப்பு பேரவை அங்கீகரிக்கவில்லை.

அரசியலமைப்புப் பேரவை என்பது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பத்து உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோர் ஏனைய இரண்டு உத்தியோக பூர்வ உறுப்பினர்களாவர். தவிர, பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி மற்றும் ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகியோர் அதில் பிரதிநிதித்துவப்படுத் துகிறார்கள்.

தவிர, சிவில் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு ஆசனம் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கானது. ஆனால், இது வரை நிரப்பப்படவில்லை.

ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு பிரதமர், ஜனாதிபதியின் பிரதிநிதி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பிரதமரின் பிரதிநிதி சாகர காரியவசம் ஆகியோர் மாத்திரமே ஆதரித்துள்ளனர்.

பெரும்பான்மை ஆதரவு மறுக்கப்பட்டதால், ஜனாதிபதி தனது முடிவுகளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி இந்த விடயத்தை பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர முற்பட்டுள்ளார்.

(அ)

# மாத்தறை சிறைச்சாலைக்குள் பொதியை வீசியவர் சிக்கினார்!

கொழும்பு, பெப். 03

மாத்தறை சிறைச்சாலைக்குள் பொதியொன்றை வீசி சென்ற ஒருவரை கைது செய்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறைச்சாலைக்குள் பொதியொன்றை வீசி சென்றுள்ளதாகவும் அதில் 10 சிகரெட்டுகள் இருந்ததாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரையும் 10 சிகரெட்டுகளையும் மாத்தறை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாத்தறை சிறைச்சாலை அதிகாரிகள்



விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

போதைப்பொருள் மற்றும் ஏனைய பொருட்களை சிறைக்குள் வழங்கும் நபர்களுக்க பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# விசேட சுற்றிவளைப்பில் 703 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, பெப். 03

பொலிஸாரின் விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ், கடந்த 24 மணித்தியாலங்களில் 703 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் இருந்த 178 சந்தேக நபர்களும் அடங்குவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, போதைப் பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 525 பேரில் போதைப்பொருளுக்கு அடிமையான 6 பேர், புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் விளக்கமறியல் உத்தரவின்படி, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது 204 கிராம் ஹெரோயின், 118 கிராம் ஐஸ் மற்றும் 447 போதை மாத்திரைகள் என்பவற்றுடன் பல்வேறு போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# சுதந்திரதின நிகழ்வுகளை குழப்ப எதிர்க்கட்சிகள் நாசகாரச் செயல்!

## மக்கள் துணைபோகக்கூடாது என்கிறது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, பெப். 03

**வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை அதில் இருந்து மீட்ட நிலையில் நாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாட கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாகும். என்றாலும் சுதந்திர தின நிகழ்வுகளை குழப்புவதற்கு எதிர்க்கட்சிகள் பல்வேறு நாசகார செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. மக்கள் அதற்கு இடமளிக்கக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் சாந்தினி கோன்கஹகே தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்னர் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்று, மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அதனால்தான் மக்கள் இன்று எரிபொருள், எரிவாயு மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கிறது. பொருட்களின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் விலைக்கு பெற்றுக்கொள்ள இன்று அனைத்து பொருட்களும் சந்தையில் இருக்கின்றன.

அத்துடன் மக்கள் தங்களின் காணி உரிமையை பெறுக் கொள்ள பிரதேச செயலங்களில் கஷ்டப்பட்டு வந்தார்கள். என்றாலும் காணி உறுதிகளை வழங்குவதற்காக இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் 2 பில்லியன் ரூபா ஜனாதிபதி ஒதுக்கி இருக்கிறார்.

அதேபோன்று நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வங்குரோத்து அடைந்திருந்த நிலையில் தற்போது வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அதேபோன்று மக்கள் எதிர்கொண்டு வரும் பொருளாதார கஷ்டங்களுக்கும் தீர்வுகாண ஜனாதிபதி படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்த நிலையில் நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை மிகவும் விமரிசையாக கொண்டாட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இதனை பொருத்துக்கொள்ள முடியாத எதிர்கட்சிகள் சுதந்திர தின நிகழ்வுகளை குழப்புவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து, சர்வதேசத்துக்கு பிழையான செய்தியை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது. என்றாலும் நாட்டு மக்கள் இவர்களின் இந்த சதி நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்ளக்கூடாது-என்றார். (அ)

# நடைபாதை வியாபார நிலையங்கள் வவுனியா நகர சபையால் அகற்றம்



வவுனியா, பெப். 03

வவுனியா சந்தைசுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ளநடைபாதை வியாபார நிலையங்கள் நகர சபையால் நேற்று அகற்றப்பட்டுள்ளன.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியில் இருந்து ஹொரவப்பொத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி ஆகியவை நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்ப்பட்டுவருவதுடன், விபத்துக்களை சந்திக்கும் நிலைமையும் எற்பட்டுள்ளது.

நடைபாதைகளை ஆக்கிரமித்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் பாதசாரிகள் பிரதான வீதியால் நடந்து செல்லவேண்டிய அவலநிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நகரசபை நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் தினந்தோறும் நடைபாதையினை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகரித்து சென்றுள்ளன.

இந்நிலையில் சந்தைசுற்றுவட்ட வீதிக்கு நேற்று சென்ற வவுனியா நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றியதுடன், அவர்களது பொருட்களையும் பறிமுதல் செய்துள்ளனர். (அ)

# பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அரசு பொறுப்பு கூறவேண்டும்!

## சுகாதார தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 03

சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள பொதுமக்களுக்கு, அரசாங்கமும் சுகாதார அமைச்சும் பொறுப்பு கூறவேண்டும் என இலங்கை குடியரசின் சுகாதார சேவைகள் சங்கத்தின் வட மாகாணத்துக்கான தலைவர் எஸ்.எச்.எம். இல்ஹாம் தெரிவித்தார்.

72 சுகாதார தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கப்பாடு ஏற்படாததை அடுத்து, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கு வழங்கப்படவுள்ள 35,000 ரூபாய் போக்குவரத்து கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டும் எனக் கோரி சுகாதார தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில், இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக வைத்தியசாலைளுக்கு சென்ற நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும், அனைத்து சிறுவர், புற்றுநோய் மற்றும் சிறுநீரக வைத்தியசாலைகளின் சேவைகள் வழமைப்போல் இடம்பெறும் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# அரசியல் சுதந்திரம் கிடைத்தாலும் பொருளாதார சுதந்திரம் இல்லை!

## அரசாங்கம் அணிசேரா கொள்கையிலிருந்து விலகியுள்ளது என்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, பெப். 03

இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு அரசியல் ரீதியான சுதந்திரம் கிடைத்த போதிலும் பொருளாதர ரீதியான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை எனவும் தற்போதைய அரசாங்கம் அணிசேரா கொள்கையில் இருந்து விலகி, அமெரிக்க சார்பு கொள்கையை நோக்கி நாட்டை கொண்டு செல்வதாகவும் லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் நிலங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை வெளிநாடுகள் சுரண்ட இடமளிக்காது, உண்மையான தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டுக்கு தேவையாற்றை நாட்டுக்குள் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டும்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரத்தை பெற்றுக்கொண்டாலும் பிரித்தானியாவின் ஆளுகைக்குள் கீழ் இருந்த நாட்டை மீட்பதற்காக என்.எம்.பெரேரா,கொல்வின் ஆர்.டி.சில்வா,லெஸ்லி பீரிஸ் போன்ற லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் சிறைக்கு சென்றனர்.

இறுதியாக 1972 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி இலங்கையை குடியரசாக மாற்றும் வரை எமது கட்சியின் தலைவர்கள் பங்களிப்புகளை வழங்கினர்.

முதலாளித்துவ பொருளாதார முறையானது பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் கையாண்டு வந்த பொருளாதார முறையின் கீழ் விரிவடைந்தது.

குறிப்பாக தேயிலை, இறப்பர் போன்ற வணிக பயிர்செய்கைகள் பிரதானமாக பிரித்தானிய முதலாளித்துவ வகுப்பினரிடம் இருந்தது. உணவு பயிர்கள் மற்றும் சிறுத்தொழில்கள் தேசிய முதலாளித்துவ வகுப்பினரிடம் இருந்தது.

பெருந்தோட்டங்களுக்கான தொழிலாளிகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டனர்.தேசிய தொழிலாளர் வகுப்பும் படிப்படியாக விரிவடைந்தது.

தொழிலாளர் சட்டங்கள் மூலம் தொழிலாளிகளின் உரிமைகளை பாதுகாத்து, நியாயமாக ஊதியத்தை வென்றெடுத்த தொழிலாளர் வகுப்புக்கான தொழிற்சங்க அமைப்பான லங்க சமசமாஜக் கட்சி முன்னேறியது-என்றார். (அ)

# "நாட்டில் புதிய சட்டங்களை கொண்டு வருவது தவறில்லை"

கொழும்பு, பெப். 03

சமூக வலைத்தளங்களில் இடம்பெறும் பல்வேறு துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த புதிய சட்டங்களை கொண்டு வருவதில் தவறில்லை என்று மல்வத்தை மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று மகாநாயக்க தேரரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போதே மகாநாயக்க தேரர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களில் சில குழுக்கள் எந்த அடிப்படையும் இன்றி தன்னையும் அவதூறு செய்துள்ளன.

எவ்வாறாயினும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்கள் அவற்றை சுதந்திரமாகப் பயன்படுத்துவதில் எந்தத் தடையும் இருக்கக்கூடாது.

அரசியல் நோக்கமின்றி சமூக ஊடகங்களை அரசாங்கம் நெறிப்படுத்தினால், அதற்குரிய விதிமுறைகளை மக்கள் எதிர்க்க மாட்டார்கள்-என்றார். (அ)

# லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலை இம்மாதம் மாற்றம் இல்லை!

கொழும்பு, பெப். 03

லிட்ரோ வீட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இம்மாதம் மாற்றப்படாது என எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.



இதன்படி, லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் மூன்று அளவுகளின் விலையும் கடந்த மாதத்தைப் போலவே இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கனடாவின் பீல் பிராந்தியப் பொலிஸார் தமிழர்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்

## ராதிகா சிற்சபேசன் வலியுறுத்தல்

மொன்றியல், பெப். 03

**கனடாவின் பீல் பிராந்திய பொலிஸார் கனடாவில், வாழும் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும் என கனடாவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் வலியுறுத்தியுள்ளார்.**

சமீபத்தில் இலங்கை தீவுக்கு பயணம் செய்திருந்த கனடாவின் பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா, இலங்கை அரசாங்கத்துடன் இணங்கி செல்லும் வகையில் செயற்பட்டு இருந்தார். அத்துடன் இலங்கை அரசின் இன அழிப்புச் செயற்பாடுகளையும் மூடிமறைக்க முற்படுகிறார்.

இந்த நிலையில் கனடாவின் பீல் பிராந்திய பொலிஸ் தலைமையகம் நிசான் துரையப்பாவை இலங்கைக்கு அனுப்பியமைக்காக பகிரங்க மன்னிப்பு கோரவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கை பொலிஸாருக்கு பல்வேறு உதவிகளை வழங்குவதாக நிசான் துரையப்பா உறுதிமொழி வழங்கியமை மிகத்தவறானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை பொலிஸாரும், படையினரும் தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு குற்றச் செயல்களை இழைத்துள்ள நிலையில் நிசான் துரையப்பா உதவி வழங்கியமை தமிழ் மக்களுக்கு அவமானம் என்றும் ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இன அழிப்பில் ஈடுபட்டதாக உலக நாடுகளும் பொலிஸ் பிரிவுகளும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் கனடாவின் பீல் பிராந்திய பொலிஸ் பிரதானியாக பதவி வகிக்கும் நிசான் துரையப்பா இலங்கை படையினருக்கு உதவி வழங்குவதாக உறுதி அழித்தமை எந்த அடிப்படையில் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் பீல் பிராந்திய பொலிஸார், இலங்கை பொலிஸாருக்கு பயிற்சிகளோ அல்லது வேறும் உதவிகளோ வழங்கக்கூடாது என தெரிவித்துள்ளதோடு தமிழ் மக்களிடம் பீல் பிராந்திய பொலிஸார் மன்னிப்பு கோரவேண்டுமெனவும் ராதிகா வலியுறுத்தியுள்ளார்.

(அ)



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இன்சுலின் ஊசி மருந்து கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 03

ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இன்சுலின் ஊசி மருந்துகள் யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

கோண்டாவில் இராஜேஸ்வரி அறக்கட்டளை தலைவர் செல்லத்துரை திருமாறனின் பிறந்த தினத்தை முன்னிட்டு போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் நீரிழிவுச் சிகிச்சை பெற்று வரும் வறிய சிறுவர்களுக்காக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இன்சுலின் ஊசி மருந்தினை யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் டாக்டர் யமுனாநந்தாவிடம் கையளித்தார்.

இதனை நீரிழிவுக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அமெரிக்க யுவதி பாலியல் துஷ்பிரயோகம் சுற்றுலா வழிகாட்டி உட்பட இருவர் கைது!

கொழும்பு, பெப். 03

அமெரிக்க யுவதி ஒருவரை துஷ்பிரயோகம் செய்து இவருடைய தங்க நகைகளை அபகரித்த குற்றச்சாட்டில் சுற்றுலா வழிகாட்டி உட்பட இருவரை கண்டி குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த 25 வயதுடைய அமெரிக்க யுவதியிடமிருந்து தங்க நகைகள் மற்றும் டொலர்கள் என்பன அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 29 ஆம் திகதி கண்டி தங்குமிடம் ஒன்றில் தான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குறித்த யுவதி நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதன் அடிப்படையில் இவர்கள் கைதாகினர்.

மேலும் யுவதியை மருத்துவரிடம் அனுப்பி அறிக்கை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தடயவியல் மருத்துவரிடம் அறிக்கை பெற யுவதி மறுத்து விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து 2,400 அமெரிக்க டொலர்கள், 3,600 அமெரிக்க டொலர் பெறுமதியான தங்க நகைகள் என்பன அபகரிக்கப்பட்டுள்ளன.

(அ)

# அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதம் 08, 09ஆம் திகதிகளில்

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் 07ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 08 ஆம் 09 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்ட பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்றது.

இதற்கு அமைய பெப்ரவரி 08 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் பெப்ரவரி 07ஆம் திகதி கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் வைபரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட விருப்பதுடன், அன்றையதினம் பாராளுமன்றத்துக்குத் தலைமைதாங்கும் கௌரவ ஜனாதிபதியினால் மு.ப 10.30 மணிக்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் முன்வைக்கப்படவுள்ளது.

(அ)

# வவுனியா குடிவரவு திணைக்களத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்ட மக்கள்

வவுனியா, பெப். 03

வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலத்தின் பிரதான வாயிலை நேற்றுக் காலை பொதுமக்கள் முற்றுகையிட்டமையினால் ஏற்பட்ட பதட்ட நிலைமையினை அடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தில் சாதாரண மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக நேற்று முன்தினம் இரவு முதல் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காரியாலயம் முன்பாக வரிசையில் காத்திருந்தனர். வரிசையில் காத்திருந்தவர்களுக்கான வரிசை இலக்கம் பொலிஸாரினால் வழங்கப்பட்டு வரிசையில் நின்றவர்களின் பெயர்களையும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பதிவு மேற்கொண்டனர்.

இந்நிலையில் 85ஆம் இலக்கம் பெற்ற நபர் வாயிலின் வெளியே வரிசையில் நிற்கத்தக்கதாக இனி எவருக்கும் கடவுச்சீட்டு வழங்க முடியாது எனவும், 160 நபர்களை தாம் ஒருநாள் சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையுடன் 50 நபர்களை சாதாரண சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையினால் பிறிதொரு தினத்தில் வருமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த வரிசையின் நின்ற பொதுமக்கள் 85ஆம் இலக்கம் பெற்ற நபர் வெளியே நிற்க எவ்வாறு 160ஆம் இலக்கம் பெற்ற நபர் உள்ளே செல்ல முடியும் என கேள்வி எழுப்பினர்.

அங்கு நின்ற பெண்கள் உள்ளடங்கலான மாபியா கும்பல் கடவுச்சீட்டு பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசைகளுக்கு இடையே அவர்களை




உள்நுழைக்கின்றனர் என தெரிவித்தமையுடன் அங்கு சற்று குழப்ப நிலைமை ஏற்பட்டது. பின்னர் திணைக்கள பிரதான வாயிலினை வழிமறித்து தமது எதிர்ப்பினையும் பொதுமக்கள் வெளிப்படுத்திருந்தனர்.

அதனால் கடவுச்சீட்டு திணைக்களம் முன்பாக பதற்றமான நிலை உருவாகியது. வவுனியா பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பியரத்தன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தினுள் சென்று ஆணையாளருடன் கலந்துரையாடினார்.

இன்று மேலதிக நபர்களை உள்ளெடுக்க முடியாது எனவும், பிறிதொரு தினத்தில் கடவுச்சீட்டினை பெருவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கான இலக்கம் வழங்குவதாகவும் ஆணையாளர் உறுதிமொழி அளித்துள்ளதாகவும் கடவுச்சீட்டினை பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசையில் ஈடுபடுத்துபவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுவதாக வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பியரத்தன தெரிவித்ததையடுத்து சுமூகமான நிலைக்கு பொதுமக்கள் வந்தமையுடன் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் பிறிதொரு தினத்தில் முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டை பெறுவதற்கான இலக்கமும் வழங்கப்பட்டது.

(அ)

# அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பம்

## அடை மழை மற்றும் பெரு வெள்ளம் காரணமாக விளைச்சலில் பெரும் பாதிப்பு

அம்பாறை, பெப். 03

**இலங்கையின் நெல் உற்பத்தியில் பெரும் பங்கினை வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் சகல இடங்களிலும் பரவலாக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளன.**



ஒரே நேரத்தில் பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு , சாய்ந்தமருது, சம்மாந்துறை அம்பாறை மற்றும் கல்முனை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட இடங்களில் பெரும்போகத்தில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை ஆரம்பித்துள்ளதால் அறுவடை இயந்திரங்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது.

அண்மையில் பெய்த அடை மழை மற்றும் சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவு திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் விளைச்சலில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஈடு செய்ய முடியாத நஸ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் விஷனம் தெரிவிக்கின்றனர்.

அனேகமான வயல்கள் முற்றாக சேதமடைந்துள்ளதால் அறுவடை செய்ய முடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கருக்கு 40 தொடக்கம் 50 மூடைகள் வரை அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் 10 மூடைகள் நெல் கிடைத்தாலே போதும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்யப்படும் நெல்லை உள்ளூர் மற்றும் வெளியூர் அரிசி ஆலை உரிமையாளர்கள் வயல் நிலங்களுக்கே வந்து நெல்லைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் வெயில் குறைவாக காணப்படுவதால் நெல்லை உலர்த்தி விதை நெல்லுக்காக சேமித்து வைப்பதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கிடையில் மாவட்ட விவசாய திணைக்களம், விவசாய விஸ்தரிப்பு நிலையங்களினூடாக நஸ்ட ஈடு வழங்குவதற்கான தகவல்களை திரட்டி வருவதாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் டீ.எம்.எஸ்.பி. திஸாநாயக தெரிவித்துள்ளார். (அ)



# வெற்றிகரமாக 15ஆவது ஆண்டினை பூர்த்தி செய்த சம்மாந்துறை ஐ.பீ.எம்.

அம்பாறை, பெப். 03

சம்மாந்துறை மண்ணில் விளையாட்டு கழகமாகவும், சமூக சேவை அமைப்பாகவும் வெற்றிகரமாக செயற்பட்டு வந்த ஐ.பீ.எம். கழகமானது இவ்வாண்டு 15ஆவது ஆண்டினை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

இவ் 15ஆவது வருட பூர்த்தியை கொண்டாடும் வகையில் சம்மாந்துறை அல் அமீர் பாடசாலையில் புதிய சீருடை அறிமுக விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உரை பெயர்பாளர் முஹம்மட் நஜிமுடீன் பிரதம அதிதியாகவும் சமூக ஆர்வலர் அனீஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு கழகத்தின் புதிய சீருடையினை அறிமுகம் செய்தனர்.

இந்நிகழ்வில் கழக நிர்வாக உறுப்பினர்கள், கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# இறைச்சிக் கடைகள் பூட்டு

அம்பாறை, பெப். 03

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 04 ஆம் திகதி ஞாயிறன்று கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் விலங்கறுமனை மற்றும் இறைச்சிக் கடைகள் யாவும் பூட்டப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவித்தலுக்கு அமைவாக அன்றைய தினம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி, கோழியிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் விலங்கறுமனைகளையும் திறக்காமல் மூடிவிடுமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் கிளைகள் புணரமைப்பு




அம்பாறை, பெப். 03

கல்முனை பிரதேசத்தில் 16ஆம் வட்டாரத்தில் கல்முனை - 10,11,12ம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மகளிர் கிளைகள் புணரமைப்பு கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய இணைப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர் தலைமையில் நேற்று முன் தினம் கல்முனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.எம்.நிஸார், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஏ.கே. கலில் றகுமான், கல்முனை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஏ.ஹனிபா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பசும்பால் விற்பனை நிலையம்

மட்டக்களப்பு, பெப். 03

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி 'ஆரோக்கியா பாலகம்' எனும் பெயரிலான பசும்பால் மற்றும் பால்சார் உற்பத்திகளின் விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக பதிவாளர் அ.பகிரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். கிழக்குப் பல்கலைக் கழக தொழிநுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் த.மதிவேந்தன், கூட்டுறவுச் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல், பல்கலைக்கழக நிதியாளர் எம்.எம்.பாரிஸ், மாணவர் விவகாரங்கள் திணைக்கள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.எப்.எம்.மர்சூக் மற்றும் பல அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நிகழ்வு நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடத்தில் தூய பசும்பால் அத்துடன் பால் உற்பத்திகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு கொம்மாதுறை கால்நடை அபிவிருத்தி, பால் சேகரிப்பு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இவ் விற்பனை நிலையத்தை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)





# ஐரோப்பிய பாராளுமன்றம்மீது முட்டை, கல் வீச்சுத் தாக்குதல்!

## 90 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது

பாரிஸ், பெப். 03

ஐரோப்பிய பாராளுமன்றம் பலத்த அடிவாங்கியுள்ளது. இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டுவரும் பிரான்ஸ் விவசாயிகளின் நாடு தழுவிய போராட்டம் இரண்டு வாரங்களை அண்மித்துள்ளது. சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் பிரான்ஸின் செயற்பாடுகளை முடக்கும் அளவுக்கு வலுப்பெற்றுள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் மீது நேற்று முன் தினம் முட்டை மற்றும் கற்களை எரிந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். பாராளுமன்ற வளாகத்தில் தீமூட்டி பட்டாசு வெடித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களின் உச்சிமாநாட்டுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் விவசாயிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து விவசாயிகளின் போராட்டத்தை கலைக்கும் வகையில் பொலிஸாரின் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.



அதிகரித்து வரும் செலவுகள், அதிகப்படியான கட்டுப்பாடு மற்றும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் - ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏற்றுமதி நாடுகளுக்கு இடையிலான கூட்டாண்மை நியாயமற்ற போட்டிக்கு வழிவகுப்பதாக விவசாய சங்கங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரின் தகவலின் படி, சுமார் 1300 இற்கும் மேற்பட்ட ட்ராக்டர்களை பயன்படுத்தி பிரதான வீதிகள் அனைத்தும் மூடப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


அத்துடன், பாரிஸ், லியோன் உள்ளிட்ட பல்வேறு முக்கிய இடங்களுக்கு பிரவேசிப்பதற்கான வீதிகளை விவசாயிகள் முற்றுகை இட்டுள்ளனர். பாரிஸின் மிக முக்கிய மொத்த விற்பனை சந்தை வளாகத்திற்குள் புகுந்த பெருமளவான விவசாயிகளை பிரான்ஸ் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இருப்பினும், பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி சில விவசாயிகள் பாரிஸூக்கு வெளியே உள்ள ருங்கிஸ் மொத்த சந்தையில் ஒன்று கூடியுள்ளனர். இதனைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 90 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ரஷ்ய ஜனாதிபதி புடினின் சொத்து விவரம் வெளியீடு

## சொத்து மதிப்பு 67.6 பில்லியன் ரூபிள்கள்

மொஸ்கோ, பெப். 03



விளாடிமீர் புடின் ரஷ்யாவின் ஜனாதிபதியாக 6 ஆண்டுகளாக பதவி வகித்து வரும் நிலையில், இந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்த லில் அவர் மீண்டும் போட்டியிட உள்ளார்.

இந்த பின்னணியில் ஜனாதிபதி புடினின் வருமான தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வேட்புமனு பத்திரத்தில் அவரது வருமானம் மற்றும் சொத்து விவரங்களை சேர்த்துள்ளார்.

அண்மையில் புடின் வழங்கிய வேட்புமனு பத்திரத்தின் விவரங்களை ரஷ்ய தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில் புடின் கடந்த 6 ஆண்டுகளில் இருந்து அவரது சொத்து மதிப்பு 67.6 மில்லியன் ரூபிள்கள் அதாவது 7 லட்சத்து 53 ஆயிரம் அமெரிக்க டொலர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2018 முதல் 2024 வரை புடின் கொள்வனவு செய்த சொத்துகளின் மதிப்பை ரஷ்ய தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

வங்கியில் உள்ள வைப்புத்தொகை, இராணுவ ஓய்வூதியம், பல இடங்களில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் இந்த தொகை பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதியின் ஓராண்டுக்கான சம்பளம் 4 லட்சம் அமெரிக்க டொலர்கள் இந்த தொகையுடன் ஒப்பிடும் போது, ரஷ்ய ஜனாதிபதியின் ஆண்டு வருமானம், அமெரிக்க ஜனாதிபதியை விட மிகக் குறைவு.

ரஷ்யா தேர்தல் ஆணைக்குழுவின் விபரங்களின் புடினது 10 வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் 54.5 மில்லியன் ரூபிள்கள் அதாவது 6 லட்சத்து 6 ஆயிரம் டொலர்களை பணத்தை வைத்துள்ளார்.

அவருக்கு சொந்தமாக ஐந்து வாகனங்களும் இருக்கின்றன. அவற்றில் இரண்டு விண்டேஜ் சோவியத் யூனியன் கார்கள். 2009 இல் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 4ஒ4 கார் மற்றும் 1987 இல் ஒரு கேம்பிங் டிரெய்லர். புடினுக்கு மொஸ்கோ மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் ஆகிய இடங்களில் இரண்டு தொடர்மாடி குடியிருப்புகள் உள்ளன.

எனினும் புடினுக்கு பின்லாந்து எல்லையில் இரகசிய மாளிகை இருப்பதாக மொஸ்கோ ரைம்ஸ் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

இந்தக் கட்டுரை வெளியான மறுநாள் ரஷ்ய தேர்தல் ஆணைக்குழு, புடினின் வருமானம் மற்றும் சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளது.

பின்லாந்து எல்லையில் கரேலியாவின் லேக் லடோகா தேசிய பூங்காவில் அதிநவீன இரகசிய மாளிகை புடினுக்கு இருப்பதாக கூறப்படுகிறது. அதில் ஆடம்பர வசதிகள் இருப்பதாக பேசப்படுகிறது.

ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் மார்ச் 15 முதல் 17 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சர்ச்சைக்குரிய அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் காரணமாக 71 வயதான ஜனாதிபதி புடின் எதிர்வரும் 2036 ஆம் ஆண்டு வரை ஆட்சி அதிகாரத்தில் இருக்க முடியும். (அ)

# ஆளில்லாத தாக்குதல் விமானங்களை இந்தியாவுக்கு விற்கின்றது அமெரிக்கா

## ஆயுதங்களை தாங்கிச் செல்லக்கூடியது

நியூயோர்க், பெப். 03

31 எம்.கியூ-9 பி ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஆளில்லா தாக்குதல் விமானங்களை (ட்ரோன்) இந்தியாவுக்கு விற்பனை செய்ய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தீர்மானம் குறித்து அமெரிக்க காங்கிரஸூக்கு அறிவித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆளில்லா விமான கொள்வனவு தொடர்பான அமெரிக்கா மற்றும் இந்தியா இடையிலான உடன்படிக்கை குறித்த விடயங்கள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த உடன்படிக்கையின் அடிப்படையில், சுமார் 4 பில்லியன் டொலர் பெறுமதியான எம்.கியூ-9 பி ஆயு தங்களை தாங்கிச் செல்லக்கூடிய ஆளில்லா விமானங் களை இந்தியாவிற்கு விற்பனை செய்ய அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த உடன்படிக்கையானது அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் அமைதிக்கான முக்கிய சக்தியாக விளங்கும் அமெரிக்க-இந்தியா மூலோபாய உறவை மேலும் வலுப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனுக்கு மேலும் 5,000 கோடி யூரோ!

## அனைத்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளும் ஒப்புதல்

கீவ், பெப். 03

அனைத்து 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளும் உக்ரைனுக்கு மேலதிகமாக 50 பில்லியன் யூரோ (54 பில்லியன் அமெரிக்க டொலர்) உதவி தொகையை வழங்க ஒப்புக் கொண்டுள்ளன.

இந்தத் தகவலை ஐரோப்பிய ஒன்றிய பேரவையின் தலைவர் சார்லஸ் மைக்கேல் சமூக ஊடகத் தளமான எக்ஸில் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஒப்புதலானது உக்ரைனுக்கான அதனது ஆதரவையும், பொறுப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

உக்ரைன் ஜனாதிபதி வொலேடிமிர் செலேன்ஸ்கியும் இந்த ஒப்புதலை வரவேற்றுள்ளதுடன், " அனைத்து தலைவர்களாலும் எடுக்கப்பட்ட முடிவு மிகவும் முக்கிய மானது, இது மீண்டும் வலுவான ஐரோப்பிய ஒன்றிய ஒற்றுமையை நிரூபிக்கிறது" என்று தனது எக்ஸ் தளத் தில் குறிப்பிட்டார்.

மேலும், உக்ரைனுக்கான தொடர்ச்சியான ஐரோப்பிய ஒன்றிய நிதி ஆதரவு நீண்டகால பொருளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

# கென்ய தலைநகர் நைரோபியை தீக்கிரையாக்கிய வெடி விபத்து!

## இருவர் பலி! 222 பேர் காயம்!!

நைரோபி, பெப். 03

கொன்யாவின் தலைநகர் நைரோபியில் வியாழன் இரவு ஏரிவாயு வெடித்ததில் குறைந்தது இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

மற்றும் 222 பேர் காயமடைந்தனர் என்று அந்நாட்டு அரசாங்க செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நைரோபியின் எம்பகாசி மாவட்டத்தில் வியாழன் இரவு 11.30 மணியளவில் ஏரிவாயு ஏற்றிச் சென்ற டிரக் வாகனம் வெடித்ததில் தீப்பரவியுள்ளது.

தீப்பரவலினால் குடியிருப்பு கட்டிடங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நைரோபி வெஸ்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் சிகிச்சை பலனின்றி இறந்தனர்.



உள்ளூர் ஊடகங்கள் ஒளிபரப்பிய படங்கள் பல குடியிருப்புகளை தீயில் கருகுவதை வெளிக்காட்டியது.

விபத்து குறித்து முன்னதாக கென்யா செஞ்சிலுவைச் சங்கம், அனர்த்தத்தில் சுமார் 300 பேர் காயமடைந்ததாக அறிவித்திருந்தது.

நைரோபியில் உள்ள வைத்தியாலைகளில் 271 நபர்களை பல்வேறு அவசரகால பிரிவுகள் அனுமதித்துள்ளதாகவும் கென்ய செஞ்சிலுவைச் சங்கம் சுட்டிக்காட்டியது. (அ)

# எதிர்காலத்தில் உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்க வேலைத்திட்டம்!

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்

கொழும்பு, பெப். 03

**எதிர்வரும் பண்டிகை காலத்தில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மரக்கறிகளின் விலைகளை குறைப்பதற்கு அமைச்சரவையில் கலந்துரையாடி தனியான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



500,000 பாடசாலைகளுக்கு மதிய உணவு வேலைத்திட்டம் குறித்து முதன்முறையாக கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, உலக உணவு அமைப்பின் பிரதிநிதி டாக்டர் அப்துல் ரஹீம் சித்தாக்கி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஒரு மாணவருக்கு மதிய உணவுக்காக 75 கிராம் அரிசியும் ஐந்து இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 04 மெற்றிக் தொன் அரிசியும் ஒதுக்கப்படவுள்ளது. உலக உணவு அமைப்பின் அனுசரணையில் விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இந்நிலையில், கடந்த ஆண்டு தரவுகளின்படி, இலங்கையில் 15.3 வீதமான பாடசாலை மாணவர்கள் போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 7.4 வீதமான பாடசாலை மாணவர்கள் அதிகப்படியான போசாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோரின் பொருளாதாரப் பிரச்னை காரணமாக பிள்ளைகளின் போஷாக்குக் குறைபாடுகள் தோன்றியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதியுடன் தனிப்பட்ட சந்திப்பை நடத்த தயாராகும் பொதுஜன பெரமுன!

கொழும்பு, பெப். 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கான கோரிக்கை ஒன்றை பொதுஜன பெரமுன முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் இந்த ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, நிமல் சிறி பால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசா நாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தமது கட்சி இதுவரையில் தீர்மானம் எடுக்காத நிலையில், ஜனாதிபதியுடன் தனிப்பட்ட கலந்துரையாடல் ஒன்றின் மூலம் இந்த விடயம் தொடர்பில் ஆழமாக கலந்துரையாடவேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# கிளிநொச்சியில் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் பொலிஸார் படுகாயம்!

கிளிநொச்சி, பெப். 03

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரமோட்டை பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அப்பகுதிக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார், குறித்த செயற்பாட்டில் ஈடுபட்ட சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட போது சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து, அவரை கைது செய்வதற்காக துரத்திச் சென்றவேளை மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதில், 37 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# அளவுக்கதிகமான போதையில் வீதியில் விழுந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 03

துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டு இருந்த வேளை வீதியில் விழுந்த நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இச்சம்பத்தில் அளவெட்டி தெற்கு பகுதியைச் சேர்ந்த சிவனடியான் சிவராசா (வயது 42) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த 28ஆம் திகதி ஆறு மணியளவில் தனது துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது கீழே விழுந்துள்ளார். இதன்போது வீதியில் சென்றவர்கள் அவரை மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். மேலும் சம்பவம் நிகழ்ந்தபோது அவர் அதிக மது போதையில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# வவுனியாவில் பொலிஸாரின் வாகனத்தின்மீது தாக்குதல்!

வவுனியா, பெப். 03

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது, தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் நபரொருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரொருவரை கைது செய்வதற்காக பொலிஸார், வாகனத்தில் சென்றபோதே வீதியில் நின்ற குறித்த நபரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்த புளியங்குளம் பொலிஸார்,அவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (அ)

# போலி ஆவணம் சமர்ப்பித்து 20 மாடுகள் கடத்திய கால்நடை வைத்தியர் கைது!

கொழும்பு, பெப். 03

போலி ஆவணங்களை சமர்ப்பித்து பசுக்கள் உட்பட 20 மாடுகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் பதவியா பிரிவின் கால்நடை வைத்தியர் மற்றும் நால்வர் கைது செய்யப்பட்டு பதவியா பொலிஸாரால் கெபிற்றிக்கொல்லாவ மாவட்ட நீதிபதி மற்றும் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்கால்நடை வைத்தியர் கே. எச்.எம்.பிரியந்த பாண்டுசிறி மற்றும் அவரது அலுவலக ஊழியர் டி.டி.பாலித ஆகியோர் தலா 500,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் தலையிட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மூன்று சந்தேக நபர்கள் பெப்ரவரி 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட கர்ப்பிணிப் பசுக்களைக் கொண்டு செல்வதற்கு சந்தேகத்திற்குரிய கால்நடை வைத்தியர் போலி ஆவணங்களை வழங்கியுள்ளதாகவும், அந்த ஆவணங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் கெபித்திகொல்லாவ விசேட குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு மாற்றப்படும் எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (அ)

# ஒரு இறாத்தல் பாணின் எடை 450 கிராம் கட்டாயமானது

கொழும்பு, பெப். 03

ஒரு இறாத்தல் பாண் மற்றும் அரை இறாத்தல் பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடையைக் குறிப்பிடும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு இறாத்தல் பாணியின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என்றும் அதன் மாறுபாடு 13.5 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரை இறாத்தல் பாணியின் பரிந்துரைக்கப்பட்ட எடை 225 கிராமாக இருக்க வேண்டும் எனவும் அதன் மாறுபாடு 09 கிராமுக்கு குறையாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படும் பாணியின் எடை தெளிவாக காணக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வைத்தியசாலையில் இருந்து தப்பிய போதைப்பொருள் சந்தேகநபர்!

வவுனியா, பெப். 03

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலில் இருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ளார். அவரை கைது செய்வதற்காக பொலிஸார் தேடுதல் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி 26ஆம் திகதி நெளுக்குளம் பொலிஸாரினானால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞன் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 29ஆம் திகதி இளைஞருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலில் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே 31ஆம் திகதி காலை 6 மணியளவில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலிருந்து அவர் தப்பியோடியுள்ளார்.

தப்பியோடிய சந்தேகநபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ளனர். (அ)

## ஜனாதிபதி...

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான ஆண்டு. அதனால் புதிய கூட்ட ணிகள் தொடர்பான அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கூட்டணிகள் தொடர்பில் சிலர் என்னு டனும் பேசியுள்ளனர். எனினும், எந்தக் கூட்டணியுடனும் இணைவது தொடர் பில் நான் முடிவு எடுக்கவில்லை.

நாட்டின் சமகால அரசியல் நில வரத்தை நான் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். பலத்த சவாலுக்கு மத்தியில் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயராது பாடுபடுகின் றார். இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றே தீர வேண்டும். அதை ஒத்திவைக்கும் எண் ணம் எவருக்கும் இருக்கக்கூடாது. - என்றார். (ஐ)

## அமைச்சர்...

அமைச்சர் ரம்புக்வெலவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வு பிரிவு தலைமையகத்துக்கு விசாரணைக்கு செல்லுமாறு மாளி காகந்தை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், அவர் விசாரணைக்கு சமுகமளித்திருக்கவில்லை. இதையடுத்து, நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவில் அமைச்சர் விசாரணைக்கு முன்னிலையாக வேண்டும் என்று நேற்று முன்தினம் மாளிகாகந்தை நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது. அத்துடன், அவருக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதித்தது.

இதையடுத்து, நேற்று காலை 9 மணிக்கு அவர் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு சென்று வாக்குமூலம் அளித்தார். சுமார் 10 மணி நேரத்துக்கும் மேலாக அவர் வாக்குமூலம் அளித்திருந்த நிலையில் நேற்றிரவு அவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, நேற்றுக் காலை குற்றப்புலனாய்வு பிரிவு தலைமையகம் முன்பாக சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் குழுமியிருந்ததுடன், அவர்கள் கெஹலிய ரம்புக்வெலவை கைது செய்யுமாறு சாத்வீக முறையில் எதிர்ப்பிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாட்டை...

ஆனால், 76ஆவது சுதந்திர தினத்தில் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள், துன்பங்களை சகித்துக்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்துக்கு ஆதரவளித்ததால் எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது. இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும்போது சிரமங்கள் யாவும் மறைந்துவிடும். வாழ்க்கை சுமை குறையும். பொருளாதாரம் வலுவடையும். இலங்கை தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

1948இல் இலங்கை சுதந்திர நாடாக மாறியபோது, இலங்கை கீழைத்தேய பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்பதே சர்வ தேசத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதற்கான அனைத்து பின்னணி காரணிகளும் எங்களிடம் இருந்தன. ஆனால், இறுதியில் நாம் வங்குரோத்தடைந்த நாடாக மாற நேரிட்டது.

கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது. நாட்டின் தற்போதைய பாதை உலகத்துக்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதால் இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும் மீண்டும் சுபீட்சத்தை கொண்டுவரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம். நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் 3 நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## புலமைப்பரிசில்...

உயர்தர பாடசாலைக்கு 159, வடமராட்சி இந்து மகளிர் பாடசாலைக்கு 157, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் 153, மானிப்பாய் மகளிர் கல்லூரி 149 வெட்டுப் புள்ளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தவிர, கொழும்பு றோயல் கல்லூரிக்கான வெட்டுப்புள்ளி 179 என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் தொடர்பான விவ ரங்களை www.moe.gov.lk எனும் இணையத்தளத்தை பார்வையிடமுடியும். (ஐ)

## நிகழ்நிலை...

சிவில் சமூகத்துக்கும் கைத்தொழில் உள்ளிட்ட துறைகளுக்கும் ஏற்படும் தாக்கம் குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் மனித உரிமைகள் பேரவை பணிமனை கோரியுள்ளளது.

## 17மாதங்களில்...

நிறுவன மட்டத்திலும் மிகக்கவனமாக ஆராயப்பட்டே இந்தத் தகவல்கள் பெறப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தாய் - சேய் இறப்புகள் குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகள், விசாரணைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மேல், தென் மாகாணங்களில் இரகசிய விசாரணை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் பிரசவ கால உயிரிழப்பு வீதத்தை குறைப்பதற்காக நாடெங்கும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் பிரசவ கால மற்றும் பிரசவத்துக்கு பின்னரான மரணங்கள் தொடர்பில் கண்காணிக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழக...

அண்மைக்காலமாக அரசியலில் தீவிர ஆர்வம் காட்டிய நடிகர் விஜய் தனது மக்கள் இயக்கம் அமைப்பின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களையும் முன்னெடுத்திருந்தார்.

நடிகர் விஜய் திடீரென கட்சியை அறிவிப்பு செய்துள்ளமை தமிழக அரசியல் களத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் விஜய்க்கு புதிய அரசியல் கட்சி ஆரம்பித்துள்ள நடிகர் விஜய்க்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜயின் அரசியல் பிரவேசத்துக்கும் அவர் ஆரம்பித்துள்ள புதிய அத்தியாயத்துக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக நாமல் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேநேரம், பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை விஜய்க்கு வரவேற்பு தெரிவித்துள்ளார். (ஐ)

## ஆனையிறவு...

விட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த பெண் உயிரிழந்தார்.

இரு சிறுவர்கள் உட்பட எண்மர் காயமடைந்திருந்தனர். இதில், ஐவர் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, மாடுகளை ஆனையிறவில் இருந்து இரணைமடுவுக்கு கொண்டு சென்றுகொண்டிருந்த இளம் குடும்பஸ்தரும் படுகாயமடைந்திருந்தார். கிளிநொச்சி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் யாழ். போதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை, இ. போ. ச. பேருந்து சாரதி அளவுக்கு அதிகமான மது போதையில் காணப்பட்டமையே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ஐ)

# இந்த அரசாங்கம் தொடரும் அவநம்பிக்கை வேண்டாம்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 03

இந்த அரசாங்கம் தொடரும். யாரும் அவநம்பிக்கை கொள்ளவேண்டியதில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வலி. மேற்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் அபிவிருத்தி குழு கூட்டத்தில் பங்கேற்றவர்களின் கோரிக்கை ஒன்று தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கம் சிறந்த திட்டங்களை தேவைக்கேற்ப நடைமுறைப்படுத்தும். தற்போது எமது அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி சிறியதே. அடுத்து வருடங்களில் போதியளவு நிதி ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

# நாளைய கரிநாள் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் கூட்டணியும் ஆதரவு!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பெப்ரவரி 4ஆம் திகதியை (நாளை) கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி இந் நாளில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்ததுக்கும் பேரணிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவைத் தெரிவிப்பதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியானது ஒற்றையாட்சி என்ற விருட்சத்தின் கீழ் அதிகாரம் முழுவதையும் பெரும்பான்மை சிங்களவரிடம் கொடுத்து மதம், மொழி, இனம் போன்ற பேரினவாத கொள்கைகளை சிறுபான்மை இனத்தின்மீது மக்கள் தொகை பலத்தின் மூலம் பெரும்பான்மை சிங்கள மக்கள் திணிக்க ஏதுவாக விட்டுச் சென்ற நாள்.

இவ்வாறு அதிகாரம் சிங்கள பெரும்பான்மையாளர்களிடம் கையளிக்கப்பட்ட பிறகு அதன் கோர முகம் தெரிய ஆரம்பித்தது. இங்கிலாந்தின் காலனித்துவத்திலிருந்து இலங்கை விடுபட்ட பின்னர் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தமிழ் மக்களை அடக்கி இனப்படுகொலை செய்து அவர்களின் பாரம்பரிய நிலங்களை எவ்வாறு அபகரிக்கலாம் என்று சிந்தித்து செயலாற்றினர். அதற்கு சிங்களப் படையினர் துணையாக நின்றனர்.

அதன் நீட்சியாக இன்றும் தமிழர்களுக்கு எதிரான கட்டமைப்பு சார் இனப்படுகொலை பல்வேறு வடிவங்களில் தொடருகின்றன. தமிழர் தாயகப் பிரதேசங்களில் அவர்களின் இருப்பை இல்லாதொழிக்கும் நோக்குடன் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மிக நுட்பமான முறையில் பறித்தெடுக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கல்களும் மிகத் தாராளமாக நடைபெறுகின்றன. அதே நேரம் தமிழர்களை பொருளாதார ரீதியிலும் நலிவடையச் செய்யும் நோக்குடன் மட்டக்களப்பு மேய்ச்சல் தரைகளை அத்துமீறி அபகரித்தல், எமது கடல்வளங்ளைச் சுரண்டுதல் போன்ற பல அடக்கு முறைகள் தொடருகின்றன.

இந் நிலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இக் கட்டமைப்பு சார் இனப்படுகொலைகளுக்கு தீர்வு காணும் வகையில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பலகலைக்கழக சமூகம் முன்னெடுக்கின்ற இப் போராட்டத்திற்கு நாம் பூரண ஆதரவைத் தெரிவிப்பதோடு அனைத்து தரப்பினர்களும் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# சனத் நிஷாந்தவுக்கு எதிரான 3 மனுக்களை மீளப்பெற அனுமதி!

கொழும்பு, பெப். 03

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களை மீளப்பெறுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

சோபித ராஜகருண மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், பிரதிவாதியான சனத் நிஷாந்த காலமானதால் இந்த மனுக்களை விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை என நீதிமன்றில் தெரிவித்தனர். (ஐ)

## ஆதரவு...

தெரிவித்தார்.

தமது கட்சியின் நிபந்தனைகளுக்கு ஜனாதிபதியின் இணக்கப்பாட்டைப் பொறுத்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் சிறீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி மகிந்த அமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, நிமல் லான்சா, நளின் பெர்ணான்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

## சுகாதார...

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண குறித்த தொழில்சங்கங்களுடன் பேச்சு நடத்தினார். இதன்போது, “ஜனாதிபதி, திறைசேரியின் செயலாளர் ஆகியோருடன் எதிர்வரும் 6ஆம் திகதி பேச்சு நடத்தி சாதகமான தீர்மானம் பெற்றுத் தரப்படும்”, என்று இதன்போது அமைச்சர் தொழில்சங்க பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

இதையடுத்தே இன்று காலை முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நிறைவுக்கு வருகின்றது. (ஐ)

## மூடப்பட்ட...

கவனிக்காது எதிர்த் திசையை மட்டும் கவனித்து விட்டு ரயில்பாதையை கடந்துள்ளார்.

அந்தச் சமயம் எதிர்த்திசையில் வந்த ரயிலுடன் மோதுண்டு அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு 150 மில்லியன் டொலர்கள் கடனுதவி!

## நிதித்துறை பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு

கொழும்பு, பெப். 03

**நிதித்துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியளிப்பதற்காக உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடம் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.**

இலங்கை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தில் கவனம் செலுத்தி, இலங்கையின் நிதித்துறையின் பாதுகாப்பு வலையின் நிதி மற்றும் நிறுவனத் திறனை வலுப்படுத்த இந்தத் தொகை வழங்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் நிதித்துறைக்கு ஆதரவளிப்பதற்கு வலுவான பாதுகாப்பு வலைகள் தேவைப்படுவதாகவும், பொருளாதாரத்திற்கு நிலையான மற்றும் நம்பகமான வங்கித் துறை அவசியமானது என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# அளவுக்கதிகமான போதைப்பொருள் பாவித்த மன்னார் இளைஞன் மரணம்!

மன்னார், பெப். 03

மன்னாரை சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவர் அதிகளவான ஐஸ் போதைப்பொருளை உட்கொண்டதால் உயிரிழந்தார்.

ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மன்னார், பேசாலை பகுதியை சேர்ந்த 22 வயதான இளைஞனே உயிரிழந்தார். அவர் திருமணம் முடித்து ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

அளவுக்கதிகமான ஐஸ் போதைப் பொருளை உட்கொண்டதால் இரத்த அழுத்தம் ஏற்பட்டு, மூளை நரம்பு வெடித்து உயிரிழந்துள்ளார். (அ)

# ஹரக்கட்டா தப்பிச் செல்லும் முயற்சிக்கு உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, பெப். 03

குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஹரக்கட்டா தப்பிச் செல்வதற்கு திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் 10ஆம் திகதி ஹரக்கட்டா என்ற சந்தேகநபர், குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளின் உதவியுடன் தப்பிச் செல்ல திட்டம் தீட்டியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கையில் அதிகரித்துள்ள மார்பகப் புற்றுநோய் விகிதம்

கொழும்பு, பெப். 03

நாட்டில் கடந்த வருடத்தில் 39 ஆயிரத்து 115 புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கில் ஒரு பங்கான பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிப்படைந்துள்ளனர். அதற்கமைய, வருடத்துக்கு அண்ணளவாக 27 சதவீதமான பெண்கள் மார்பாக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

அண்மைக்காலமாக, நாட்டில் மார்பக புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் அடையாளம் காணப்பட்ட தரவுகளுக்கமைய நாளாந்தம் 103 புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், 2019ஆம் ஆண்டு 15ஆயிரத்து 598 பேர் இந்நோயினால் உயிரிழந்திருக்கின்றார்கள். அவ்வாறெனில், நாளொன்றுக்கு புற்றுநோயால் 42பேர் உயிரிழக்கின்றனர். இந்த எண்ணிக்கைகள் மிகவும் உயர்ந்த மட்டத்தை வெளிப்படுத்துவதாக சுகாதார அமைச்சின் புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் விசேட மருத்துவ நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்தார். (அ)

# வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் திட்டம் கல்முனை மாநகர சபையால் முன்னெடுப்பு


அம்பாறை, பெப். 03

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகைகளை நிறுவும் வேலைத்திட்டம் கடந்த புதன்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்கள் தலைமையில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் ஆகியோரின் பங்குபற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தனியார் பங்களிப்புடனான நகர அழகுபடுத்தல் திட்டத்தின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் கீழுள்ள 150 வீதிகளுள் கல்முனை - மட்டக்களப்பு மற்றும் கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் இருந்து ஆரம்பிக்கும் 40 வீதிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பெயர்ப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர பிரதேசங்களில் நீண்ட காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பெரும்பாலான வீதிகளின் பெயர்ப் பலகைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் காணப்பட்டதுடன் சில வீதிகளின் பெயர்ப் பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன.




இதனால் வெளியிடங்களில் இருந்து வருகை தருகின்ற பயணிகள் மாத்திரமல்லாமல் உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இக்குறைபாட்டைக் கருத்தில் கொண்ட மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்கள் இது விடயத்தில் அதிக கரிசனையுடன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் குழந்தை பிரசவித்த இளம்பெண் திடீர் மரணம்!

## காரணம் வெளியாகவில்லை உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு

யாழ்ப்பாணம், பெப். 03

குழந்தையை பிரசவித்த இளம் குடும்பப் பெண்ணொருவர் கடந்த புதன்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மாதகல் மேற்கு பகுதியைச் சேர்ந்த அருள்டிசாந்தன் கொலஸ்ரிகா (வயது 28) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 11 மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்திருந்தார். இந்நிலையில் அவர் 6 மாதக் கர்ப்பிணியாக இருந்தார். இவருக்கு கடந்த 23ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த பின்னர் 24ஆம் திகதி வீடு திருப்பியுள் ளார்.

பின்னர் இவருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தை இரண்டு மணித்தியாலங்களில் உயிரிழந்தது.

இந்நிலையில் குறித்த பெண் தொடர்ச்சியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# புலம்பெயர் தொழிலாளர் மூலம் கிடைத்த பெருந்தொகை பணம்

## அந்நிய செலாவணி அதிகரிப்பு

கொழும்பு, பெப். 03

கடந்த வருடத்தில் புலம் பெயர் தொழிலாளர்களிடமிருந்து 89 இலட்சம் டொலர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு தற்போதைக்கு 450 கோடி டொலர்களாக அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கு புலம்பெயர் தொழிலாளர்கள் மூலமாகவே இந்நாட்டுக்கு கூடுதலான அந்நிய செலாவணி கிடைத்து வருகின்றது.

அதற்கு மேலதிகமாக கொரியா வேலைவாய்ப்பின் மூலமாகவும் குறிப்பிடத்தக்க அளவு அந்நிய செலாவணியை இலங்கை ஈட்டி வருகின்றது. (அ)

# 5ஆம் திகதி பொது விடுமுறை இல்லை

கொழும்பு, பெப். 03

76 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட்டாலும், அதற்கு மறுநாள் பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன நேற்று தெரிவித்தார்.

அதன்படி, திங்கட்கிழமை அனைத்து அரச நிறுவனங்களும் வழமை போன்று இயங்கும் எனவும் யசரத்ன மேலும் கூறினார். (அ)

# சு.கவின் கூட்டணி ரணிலுக்கே ஆதரவு

## கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, பெப். 03

சுதந்திரக் கட்சியினால் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள புதிய கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக தான் அறிவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உருவாக்கப்பட்ட கூட்டணிகள் மீது எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் நம்பிக்கை இல்லை எனவும் அவர் கூறினார். மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தில் பலருக்கு நம்பிக்கை இல்லை.

கடந்த வாரம் நிமல் லான்சா நடத்திய கூட்டத்தைப் பார்த்தேன். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதை நான் கவனித்தேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## ஜெய்ஸ்வால் அதிரடி ஆட்டம் இந்தியா முதல்நாளில் 336/6

விசாகப்பட்டினம், பெப். 03

ஜெய்ஸ்வால் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ள 179 ஓட்டங்களால் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் நாளில் இந்திய அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 336 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் விசாகப்பட்டினத்தில் நேற்று தொடங்கியது.

இந்தப் போட்டியில் ரஜத் படிதார் முதன்முறையாக இந்திய அணியில் அறிமுகம் ஆனார். மேலும் முகேஷ் குமார், குல்தீப் யாதவ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர். நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி இந்திய அணியின் தொடக்க வீரர்களாக ரோஹித் சர்மா- ஜெய்ஸ்வால் ஆகியோர் களமிறங்கினர். ரோஹித் சர்மா 14 ஓட்டங்களிலும், அடுத்து வந்த ஷுப்மன் கில் களம் 34 ஓட்டங்களிலும் ஷ்ரேயாஸ் ஐயர் 27 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

ஒரு முனையில் விக்கெட்கள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ஜெய்ஸ்வால் தனது இரண்டாவது சதத்தை விளாசினார்.

ஜெய்வாலுடன் சேர்ந்து பொறுப்புடன் விளையாடிய ரஜத் பட்டிதார் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அக்ஷர் பட்டேல் 27 ஓட்டங்கள், பரத் 17 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

இதனால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 93 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 336 ஓட்டங்கள் எடுத்தது.

இங்கிலாந்து அணி தரப்பில் பஷிர், ரெஹான் தலா 2 விக்கெட்களையும் அண்டர்சன், ரொம் ஹார்ட்லி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

ஜெய்ஸ்வால் 179 ஓட்டங்களுடனும் அஸ்வின் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

ஆட்ட நேர முடிவில் இந்திய அணி வீரர்கள் அதிரடியாக ஆட முனைந்ததால் இரு விக்கெட்கள் இழக்கப்பட்டன.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும்.

# 198 ஓட்டங்களுக்கு ஆப்கானை சுருட்டியது இலங்கை அணி!

கொழும்பு, பெப். 03

விஸ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, பிரபாத்தின் அபார பந்து வீச்சால் ஆப்கானிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்தப் போட்டி நேற்று கொழும்பில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தானின் தொடக்க வீரர் இப்ராகிம் ஷட்ரான் ஓட்டம் எதையும் பெறாமல் இரண்டாவது பந்திலேயே வீழ்ந்தார். எனினும் அலி ஷட்ரானுடன் இணைந்த ரஹ்மத் ஷா பொறுமையாக ஆடினார்.

இருவரும் இலங்கை பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். எனினும், அலி ஷட்ரான் 31 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அவரின் பின்னர் வந்தவர்களில் இக்ரம் அலிகில் 21, அஹமட் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரஹ்மத் ஷா மட்டும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 91 ஓட்டங்களை எடுத்தார். 62.4 ஓவர்களில் ஆப்கானிஸ்தான் அணி 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இலங்கை அணி சார்பில் விஸ்வ பெர்னாண்டோ 4




விக்கெட்களையும் அசித பெர்னாண்டோ, பிரபாத் ஜெயசூர்யா ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு நிஷான் மதுஷ்க, திமுத் கருணாரத்ன ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்த போது இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நிஷான் மதுஷ்க 36, திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியா அபார வெற்றி!

மெல்பர்ன், பெப். 03

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது. இதனையடுத்து இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

மெல்பர்னில் நேற்று நடந்த முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் அஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்தனர். 48.4 ஓவர்கள் தாக்குப்பிடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 231 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக கீசி கார்டி 88 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலிய அணி தரப்பில் அதிகபட்சமாக சேவியர் பார்ட்லெட் 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து 232 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் டிராவிஸ் ஹெட் விரைவில் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

இதன் பின் கை கோத்த கமரூன் கிறீன் - ஜோஷ் இங்கிலிஸ் இணை சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றது. அதிரடியாக விளையாடிய ஜோஷ் இங்கிலிஸ் 43 பந்துகளில் 65 குவித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் அணித் தலைவர் ஸ்ரீவன் ஸ்மித் கமரூன் கிறீனுடன் இணைந்து மேலும் விக்கெட் விழாமல் அணியை வெற்றி பெற வைத்தார்.

38.3 ஓவர்களிலேயே 2 விக்




கெட்டை மட்டுமே இழந்த அவுஸ்திரேலியா 232 ஓட்டங்கள் அடித்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கமரூன் கிறீன் 77 ஓட்டங்களிலும், ஸ்ரீவன் ஸ்மித் 79 ஓட்டங்களிலும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றி பெற செய்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.



# சமர் ஜோசப்புக்கு கௌரவம்!

ஜமைக்கா, பெப். 03

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் 27 ஆண்டுகளின் பின்னர் வெற்றி பெற்றது.

ஆவிக்கு எதிராக 27 ஆண்டுகளுக்கு பின்னர் டெஸ்ட் வெற்றியை பெற காரணமாக இருந்த சமர் ஜோசப்புக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி கௌரவம் அளித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்ட யில் மேற்கிந்தியத்தீவுகள் 27 ஆண்டுகளின் பின்னர் வெற்றி பெற்றது.

இந்த மகத்தான வெற்றியை பெற்றுக் கொடுத்த சமர் ஜோசப் பின் உரிமை ஒப்பந்தத்தை தற்போது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை சர்வதேச ரிட்டைனர் ஒப்பந்தமாக மேம்படுத்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதனால், சர்வதேச அளவில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடும் வீரர்களுக்கு கிடைக்கும் அதிகபட்ச சம்பளம் சமர் ஜோசப்புக்கும் கிடைக்கும்.

அத்துடன் இந்த ஒப்பந்தத்தால் வரும் காலங்களில் மேற்கிந்தியத் தீவுகளுக்காக நிறைய போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பும் அவருக்கு கிடைக்கும். (ஐ)

# அமெரிக்க செனட் விசாரணையில் பெற்றோர்களிடம் மன்னிப்பு கேட்ட முகநூல் நிறுவன அதிபர் மார்க் ஷுக்கர்பெர்க்!

அமெரிக்க செனட் சபையில் நடத்தப்பட்ட தீவிர விசாரணையின்போது, சமூக ஊடகங்களால் தங்கள் குழந்தைகள் பாதிக்கப்படுவதாகப் புகாரளித்த குடும்பத்தினரிடம், மெட்டா நிறுவன தலைவர் மார்க் ஜுக்கர்பெர்க் மன்னிப்பு கோரினார்.

இன்ஸ்டாகிராம் மற்றும் ஃபேஸ்புக்கை நிர்வகிக்கும் ஜுக்கர்பெர்க், புகாரளித்த குடும்பத்தினரை நோக்கி நீங்கள் பட்ட துயரத்தை வேறு யாரும் படக்கூடாது என்றார்.

மார்க் ஜுக்கர்பெர்க் மற்றும் டிக்டாக், ஸ்னாப், எக்ஸ், டிஸ்கார்ட் நிறுவனங்களின் தலைவர்களும் செனட் சபையின் இரு கட்சிகளைச் சேர்ந்த செனட்டர்களால் கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.




குழந்தைகள் பாதுகாப்பு குறித்து ஆன்லைன் தளங்களில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை அறிய அமெரிக்க சட்டமியற்றுபவர்கள் விரும்பினர்.

சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் விஷயங்களுக்கு அந்தந்த நிறுவனங்களே பொறுப்பேற்கும் விதமாக ஒரு சட்டத்தை இயற்ற தற்போது அமெரிக்க காங்கிரஸ் பரிசீலித்து வருகிறது.

கடந்த புதன்கிழமை அன்று தொழில்நுட்ப நிறுவன தலைவர்களைக் கேள்வி கேட்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு அமெரிக்க செனட்டர்களுக்கு கிடைத்தது.

### அமெரிக்க செனட் சபை விசாரணை

மார்க் ஜுக்கர்பெர்க் மற்றும் டிக்டாக் தலைமை நிர்வாக அதிகாரி ஷௌ ஜி செவ் ஆகியோர் தானாக முன்வந்து சாட்சியமளிக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் ஸ்னாப், எக்ஸ் (முன்னர் ட்விட்டர்), மெசேஜிங் தளமான டிஸ்கார்டின் தலைவர்கள் முதலில் செனட் சபை விசாரணைக்கு வர மறுத்தனர். பின்னர் கண்டிப்பாக விசாரணைக்கு வர வேண்டுமென அரசு ஆணைகள் அவர்களுக்கு அனுப்பப்பட்டன.

விசாரணையின்போது ஐந்து தொழில்நுட்ப தலைவர்களின் இருக்கைகளுக்குப் பின்னால், சமூக ஊடக பதிவுகளின் விளைவாக தங்கள் குழந்தைகள் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொண்டதாக அல்லது தற்கொலை செய்துகொண்டதாகப் புகாரளித்த குடும்பங்கள் அமர்ந்திருந்தனர்.

நிறுவன தலைவர்கள் உள்ளே நுழைந்தபோது அவர்களிடம் இருந்த எரிச்சல், சட்டமியற்றுபவர்கள் நிறுவன தலைவர்களிடம் கடினமான கேள்விகளைக் கேட்டபோது கைதட்டியது என அந்தக் குடும்பங்கள் தங்கள் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தினர்.

பெரும்பாலும் விசாரணையின்போது ஆன்லைன் பாலியல் சுரண்டலில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது குறித்து அதிக கேள்விகள் கேட்கப்பட்டன. ஐந்து சக்தி வாய்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை சாதகமாகப் பயன்படுத்தி செனட்டர்கள் பல்வேறு கடினமான கேள்விகளையும் கேட்டனர்.

சீன நிறுவனமான பைட் டான்ஸுக்கு சொந்தமானது டிக்டாக். அதன் தலைவர் ஷௌ ஜி செவ்விடம் அமெரிக்க பயனர்கள் குறித்த தரவுகள் சீன அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறதா என்று கேட்கப்பட்டது, அதை அவர் மறுத்தார்.

சிங்கப்பூரை சேர்ந்த செவ்விடம், “எப்போதாவது நீங்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்ததுண்டா?” என அமெரிக்க செனட்டர் டாம் காட்டன் கேட்டார். அதற்கு செவ் “இல்லை செனட்டர், என் நாடு சிங்கப்பூர்” எனக் கூறினார்.

“நீங்கள் எப்போதாவது சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஏதேனும் தொடர்பில் இருந்ததுண்டா?” என காட்டன் மீண்டும் கேட்டார். அதற்கு செவ், “இல்லை செனட்டர். மீண்டும் சொல்கிறேன், என் நாடு சிங்கப்பூர்” எனக் கூறினார்.



மூன்று இளம் குழந்தைகளின் தந்தையாக, இந்த விசாரணையில் விவாதிக்கப்படும் பிரச்னைகள் “மோசமானவை மற்றும் ஒவ்வொரு பெற்றோரின் கொடுங்கனவாகவும் அவை உள்ளன” என்று தனக்குத் தெரியும் என்றும் செவ் கூறினார்.

சிங்கப்பூரில் உள்ள 13 வயதுக்கு உட்பட்டவர்கள் டிக்டாக் கணக்குகளை உருவாக்குவதைத் தடுக்கும் விதிகளின் காரணமாக, தனது சொந்த பிள்ளைகள் டிக்டாக் பயன்படுத்துவதில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார். காங்கிரஸில் எட்டாவது முறையாக சாட்சியமளிக்கும், மெட்டாவின் தலைமை நிர்வாகி மார்க ஜுக்கர்பெர்க் தான் அதிக கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

“எச்சரிக்கை: குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான உள்ளடக்கங்கள் இதில் இருக்கலாம். ஆனால் பயனர்கள் விரும்பினால் இதைப் பார்க்கலாம்,” என்ற ஒரு இன்ஸ்டாகிராம் அறிவிப்பை ஜுக்கர்பெர்கிடம் காட்டி, குடியரசுக் கட்சியின் செனட்டர் டெட் குரூஸ், “மிஸ்டர் ஜுக்கர்பெர்க், நீங்கள் என்ன நினைத்து இதைச் செய்தீர்கள்?” என்றார்.



“இத்தகைய அறிவிப்புக்குப் பின்னால் இருக்கும் அடிப்படை அறிவியலானது, அதைத் தடுப்பதற்குப் பதிலாக, அதை நோக்கிப் பயனர்களை வழிநடத்துவதற்குப் பெரும்பாலும் உதவியாக இருக்கிறது” என்றார். மார்க் ஜுக்கர்பெர்க், “தனிப்பட்ட முறையில் இதை பரிசீலிப்பதாக” உறுதியளித்தார்.

குடியரசுக் கட்சியின் செனட்டர் ஜோஷ் ஹவ்லி உடனான மற்றொரு விவாதத்தின்போது, பின்னால் அமர்ந்திருக்கும் குடும்பத்தினரிடம் மன்னிப்பு கேட்க அழைக்கப்பட்டார் மார்க் ஜுக்கர்பெர்க்.

அவர் எழுந்து, பார்வையாளர்களை நோக்கி, ‘நீங்கள் கடந்து வந்த அனைத்திற்கும் நான் வருந்துகிறேன், இது பயங்கரமானது. உங்கள் குடும்பங்கள் அனுபவித்த துயரங்களை யாரும் அனுபவிக்கக் கூடாது,” என்றார்.

### ஆன்லைன் பாதுகாப்பில் முன்னேற்றம் இல்லாததால் செனட்டர்கள் விரக்தி

தற்போது அமெரிக்க காங்கிரஸில் உள்ள ஆன்லைன் பாதுகாப்பு சட்டத்திற்கு நிறுவனங்களின் அணுகுமுறை என்ன என்பதே இந்த விசாரணையின் முக்கிய அம்சமாக இருந்தது. டிஸ்கார்டின் தலைவர் ஜேசன் சிட்ரான் மற்றும் குடியரசுக் கட்சியின் செனட்டர் லிண்ட்சே கிரஹாம் ஆகியோருக்கு இடையிலான பதற்றமான விவாதத்தில் இது வெளிப்பட்டது.

கிரஹாம், ஆன்லைன் பாதுகாப்பு தொடர்பான காங்கிரஸின் பல மசோதாக்களை பட்டியலிட்டு, சிட்ரான் அவற்றை ஆதரிக்கிறாரா இல்லையா என்று கேட்டார். இந்தக் கேள்வி உட்பட வேறு சில கேள்விகளுக்கும் பதிலளிப்பதில் டிஸ்கார்ட் தலைவர் சிட்ரானுக்கு தயக்கம் இருந்தது.

அதே நேரத்தில் அவர் பதிலளிக்கப் போதுமான வாய்ப்பையும் கிரஹாம் கொடுக்கவில்லை. இறுதியாக ‘நீங்கள் இங்கே விசாரணையில் இருக்கிறீர்கள். பிரச்னையைத் தீர்க்க இவர்களுக்காக (நிறுவன தலைவர்கள்) நாம் காத்திருந்தால், சாகும் வரை காத்திருக்க வேண்டியது தான்,” என்று கிரஹாம் கூறினார்.

விசாரணைக்கு முன்னதாக, மெட்டா புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிவித்தது. சிறார்களுக்கு இன்ஸ்டாகிராம் மற்றும் மெசஞ்சரில் அந்நியர்கள் யாரும் செய்திகளை அனுப்ப முடியாது என்ற புதிய விதியும் அதில் இருக்கிறது.

சமூக ஊடகத் துறை ஆய்வாளர் மாட் நவர்ரா, ‘பல அமெரிக்க அரசியல் பிரமாண்டங்கள்” மற்றும் ஜுக்கர்பெர்க் மன்னிப்பு கேட்டதன் மூலம் கிடைத்த சரியான வாய்ப்பு போன்ற பல நிகழ்வுகள் இந்த விசாரணையில் நடந்ததாகக் கூறினார்.

சமூக தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இருதரப்பு சட்ட ஒத்துழைப்பின் அவசியத்தை செனட்டர்கள் ஒப்புக்கொண்ட போதிலும், அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்விக்கான பதில் தெளிவாக இல்லை என்றும் அவர் கூறினார்.



‘இதுபோன்ற விசாரணைகளை மீண்டும் மீண்டும் பார்த்துவிட்டோம். அவை பெரும்பாலும், குறிப்பிடத்தக்க அல்லது கணிசமான ஒழுங்குமுறைகளை இதுவரை உருவாக்கவில்லை. நாம் 2024இல் இருக்கிறோம். சமூக ஊடக நிறுவனங்களைப் பொறுத்தவரை, விசாரணைகளின்போது சுட்டிக்காட்டப்பட்டபடி, அமெரிக்காவில் நடைமுறையில் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை,” என்று அவர் கூறினார்.

நிறுவன தலைவர்கள் தங்கள் தளங்களில் உள்ளடக்கத்தைத் தணிக்கை செய்வதற்கு எத்தனை பேரை வேலைக்கு அமர்த்தினார்கள் என்பதையும் வெளிப்படுத்தினர்.

இணையத்தில் மிகப்பெரிய அளவு பயனர்களைக் கொண்டுள்ள மெட்டா மற்றும் டிக்டாக், தங்களிடம் தலா 40,000 உள்ளடக்க மதிப்பீட்டாளர்கள் இருப்பதாகவும், ஸ்னாப் 2,300 என்றும், எக்ஸ் 2,000 என்றும், டிஸ்கார்ட் சிறிய நிறுவனம் என்பதால் “நூற்றுக்கணக்கில்” மட்டுமே மதிப்பீட்டாளர்கள் இருக்கிறார்கள் என்றும் கூறியது.

டிஸ்கார்ட் என்பது ஒரு மெசேஜிங் தளம். இது எவ்வாறு அதன் தளம் முழுவதும் ‘சிறார் துஷ்பிரயோகத்தை” கண்டறிந்து தடுக்கிறது என்பது குறித்து முன்னர் கேள்வி எழுப்பப்பட்டது. விசாரணைக்குப் பிறகு, அறையில் இருந்த சில பெற்றோர்கள் வெளியே பேரணி நடத்தினர். சமூக ஊடக நிறுவனங்களைப் பொறுப்பேற்கச் செய்யும் சட்டத்தை அவசரமாக நிறைவேற்றுமாறு பலர் சட்டமியற்றுபவர்களுக்கு அழைப்பு விடுத்தனர்.

‘நான் நினைத்ததைப் போலவே, இன்று நாம் பேசும் இந்தத் தீங்குகள் தங்கள் குடும்பங்களைப் பாதிக்காது என்று பல பெற்றோர்கள் தொடர்ந்து நினைக்கிறார்கள்,” என்று ஜோன் போகார்ட் கூறினார். மே 2019இல் ஒரு டிக்டாக் டிரெண்டில் பங்கேற்றதன் மூலமாகத் தனது மகன் மேசன் இறந்தார் என அவர் கூறினார்.

‘இந்தத் தீங்குகள் எங்கள் குழந்தைகளைப் பாதிக்கிறது, எங்களிடம் சாட்சியங்கள் உள்ளன. ‘குழந்தைகள் ஆன்லைன் பாதுகாப்புச் சட்டத்தை’ சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றுவதற்கான நேரம் இது.

நவம்பர் 2023இல் காங்கிரஸ் சபையில் சாட்சியமளித்த முன்னாள் மூத்த ஊழியர் ஆர்டுரோ பெஜரும் அங்கு இருந்தார். அவர் பிபிசியிடம், “பதின்ம வயதினருக்கான பாதுகாப்பான சூழலை வழங்கும் பொறுப்பில் இருந்து மெட்டா நிறுவனம் தப்பிக்க முயல்கிறது. பதின்பருவ பிள்ளைகள் தாங்கள் சந்தித்த கொடுமைகளைச் சொல்ல அந்தத் தளத்தில் வசதி இல்லை. அது இல்லாமல் பதின்ம வயதினருக்கு மெட்டா எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும்?” எனக் கூறினார்.

இன்றைய விசாரணையின்போது, ஆன்லைனில் பதின்ம வயதினருக்கான பாதுகாப்பான சூழலை ஆதரிக்க “30க்கும் மேற்பட்ட புதிய கருவிகளை” அறிமுகப்படுத்தியுள்ளதாக மெட்டா கூறியது.

# 200 உறுப்பினர்களுடன் பாராளுமன்றமும் 50 உறுப்பினர்களுடன் செனட் சபையும் அமைக்கப்படவேண்டும்

**பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட**



ஜனநாயகத்துக்கு விரோதமான சட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு 200 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமும் 50 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபையும் அமைக்கப்படவேண்டும் என்று மூத்த அரசறிவியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவரும் வேறு பல நிபுணர்களும் சேர்ந்து 'அரசியல் மற்றும் அரசியலமைப்பு மாற்றங்களின் ஊடாக ஜனநாயகத்துக்கான அடிப்படைக் கோட்பாடுகளும் முன்மொழிவுகளும்" என்ற தலைப்பில் விரிவான ஆவணமொன்றை தயாரித்திருக்கிறார்கள்.

அது தொடர்பாக விளக்கம் அளித்த பேராசிரியர் உயன்கொட கூறியதாவது:

பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு நீதித்துறைக்கு வழங்கப்படவில்லை. அடுத்தடுத்து தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றங்கள் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களை நிறைவேற்றிவந்திருக்கின்றன.

செனட் சபை அமைக்கப்படவேண்டும் என்று தற்போது முன்வைக்கப்படும் யோசனை சோல்பரி அரசியலமைப்பினால் அமைக்கப்பட்ட செனட்டின் வழியில் அமைந்ததல்ல.

தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் மக்களின் இறைமை துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிரான ஒரு தடுப்பாக செயற்படக்கூடியதாக செனட் இருக்கவேண்டும் என்றே இப்போது யோசனை முன்வைக்கப்படுகிறது.

மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களினால் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையை முன்னெடுப்பதற்கு தடையாக செனட் இருந்ததாக அன்று நிலவிய ஒரு கருத்து காரணமாகவே 1972 ஆம் ஆண்டில் செனட் ஒழிக்கப்பட்டது.

செனட் ஒழிக்கப்படவேண்டும் என்ற கோராக்கை அன்று இடதுசாரிக கட்சிகளிடம் இருந்தும் மத்திய - இடதுபோக்குடைய கட்சிகளிடம் இருந்துமே வந்தது. அந்த நேரத்தில் இருந்த செனட் பிரிட்டனின் பிரபுக்கள் சபையை ஒத்ததாக இருந்ததாக அவர்கள் உணர்ந்தார்கள். இலங்கையின் சூழ்நிலைகளில் செனட் ஜனநாயக விரோதமானது என்று அவர்கள் நினைத்தார்கள். 1972 ஆம் ஆண்டில் நானும் அதை ஏற்றுக்கொண்டேன்.

ஆனால், இப்போது அந்தப் பின்புலம் பெருமளவுக்கு மாறிவிட்டது. கொடூரமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றம் ஆளும் அரசியல் கட்சாகளினால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களைப் பாருங்கள். சட்டங்களின் உள்ளடக்கங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் வாசித்துக்கூட பார்ப்பதில்லை என்பது வெளிப்படையானது. இந்த சட்டங்களில் எதுவுமே குடியரசுக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவையாக இல்லை.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதைப் பற்றியே அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். பாராளுமன்றம் வெறுமனே ஒரு இறப்பர் முத்திரையாக செயற்படுவதாகவும் வரியிறுப்பாளர்களின் பணத்தில் பாராளுமன்றத்தைப் பேணுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் மக்கள் நம்புகிறார்கள். இந்த நடைமுறைகளை கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழியாகவே நாம் செனட் சபை அமைக்கப்படவேண்டும் என்று யோசனையை முன்வைக்கிறோம்.

பாராளுமன்றத்தின் மீதான நம்பிக்கை முன்னென்றும் இல்லாத அளவுக்கு தாழ்ந்த நிலையில் இருக்கிறது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொந்தக் கிராமங்களுக்கு கூட செல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள். பாராளுமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது.

இலங்கை அரசியல் சமுதாயத்தில் இன்று நிலவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வெறுமனே அரசியலமைப்புக்கு மாற்றங்களைக் கொண்டுவருவது உதவப்போவதில்லை. அரசியல் முறைமையையும் மாற்றவேண்டியிருக்கிறது. தீர்மானங்களை எடுப்பதில் குறிப்பாக சமுதாயத்தின் அடிமட்டங்களில் பெரிய பாத்திரத்தை வகிப்பதற்கான வாய்ப்பை மக்களுக்கு கொடுக்கவேண்டிய தேவை இருக்கிறது.

மக்கள் மத்தியில் காணப்படும் சீற்றத்தை பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் எளிதாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய எவருக்கும் நாட்டில் யதார்த்த நிலை எந்தளவு நிலையுறுதியற்றதாக இருக்கிறது என்பது தெரியும்.

இலங்கையில் ஜனநாயகத்தை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும் வேண்டிய தேவை இருக்கிறது. அமைச்சரவை 20 உறுப்பினர்களைக் கொண்டதாகவும் அவர்களில் ஐந்து பேர் பெண்களாக இருக்கவேண்டும் என்றும் நாம் யோசனை முன்வைக்கிறோம்.

உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு என்று ஒரு கோட்டா இருக்கிறது. அந்த கோட்டா அரசியல் கட்சிகளினால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்களில் பலர் அரசியல் தலைவர்களின் உறவினர்களாக அல்லது கூட்டாளிகளாக இருக்கிறார்கள்.

இது பல நாடுகள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது இந்தப் பிரச்சினையைக் கையாள சால கோட்பாடுகளை நாம் வகுக்கவேண்டியிருக்கிறது. இதற்கான திட்டவட்டமான பதில் என்னிடமில்லை. அதன் காரணத்தினால் தான் எமது யோசனைகளை மக்கள் முன்னிலையில் வைத்து அவர்களின் யோசனைகளை அறிய விரும்புகிறோம்.

மக்களின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதாக எதிர்கால அரசியலமைப்பு இருக்கவேண்டும். அண்மைய வருடங்களில் இந்த உரிமைகள் மக்களிடம் இருந்து எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால், பொருளாதார நீதிக்கு தாங்கள் உரித்துடையவர்கள் என்ற விழிப்புணர்வு மக்களிடம் வளர்ந்துவருகிறது.

நாம் எப்போதும் சிவில் உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் பற்றியே பேசுகிறோம். பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் மக்கள் விரும்புகிறார்கள். இந்த உரிமைகளைப் பற்றி எமது அரசியலமைப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தை தற்போதைய நிலைவரத்துக்கு ஏற்றமுறையில் புதுப்பிக்கவேண்டிய தேவை இருக்கிறது. ●

